தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 27.12.2012 A.M

### புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை : தென் கடலோர தமிழகத்தில் மழை வாய்ப்பு

வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியிருப்பதால் தென் கடலோர தமிழகப் பகுதியில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடகிழக்குப் பருவமழை இந்தாண்டு எதிர்பார்த்த அளவுக்கு பெய்யவில்லை. வங்கக் கடலில் அடுத்தடுத்து காற்றழுத்தத் தாழ்வு நிலைகள் உருவானாலும், அவற்றால் தமிழகத்தில் பெரிய அளவில் மழை பெய்யவில்லை.

கடந்த 3 நாள்களுக்கு முன்பு அந்தமான் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக தென் கடலோர தமிழகத்தில் லேசான மழையே பெய்தது. இந்த நிலையில் வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தென் மேற்கு வங்கக் கடலின் தென் பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தென் கடலோர தமிழகத்தின் சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகளில் ஆங்காங்கே மழையோ இடியுடன்கூடிய மழையோ வியாழக்கிழமை பெய்யும். தமிழகத்தின் மற்ற பகுதிகள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. தரைக்காற்று அவ்வப்போது பலமாக வீசும்.

சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் லேசான மழை பெய்யும். தரைக்காற்று பலமாக வீசும்.

புதன்கிழமை காலை நிலவரப்படி பாம்பன் மற்றும் வேதாரண்யத்தில் 10 மீ.மீ. மழை பதிவானது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு தாராளமாக நிவாரணம் வழங்க வேண்டும் : கருணாநிதி**



விவசாயிகளுக்கும் விவசாயச் தொழிலாளர்களுக்கும் தமிழக அரசு தாராளமாக நிவாரண உதவிகள் வழங்க வேண்டும்

என்று திமுக தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை:

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிடக் கோரி டிசம்பர் 20-ம் தேதியும், 22-ம் தேதியும் பிரதமருக்கு முதல்வர்

ஜெயலலிதா அடுத்தடுத்து கடிதங்கள் எழுதியுள்ளார். தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் 5.2.2007 அன்று நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு

வெளியானது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் தீர்ப்பினை வரவேற்று அறிக்கை வெளியிட்டனர். தீர்ப்பு ஆறுதல்

தருகிறது என்று நான் கூறினேன். ஆனால் இறுதித் தீர்ப்பு தமிழகத்துக்கு பாதகமாக வந்துள்ளது என்றும், இதற்கு தார்மிகப் பொறுப்பேற்று

தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் ஜெயலலிதா அப்போது அறிக்கை வெளியிட்டார். ஆனால் அந்த இறுதித் தீர்ப்பைதான்

அரசிதழில் வெளியிட வேண்டும் என்று இப்போது பிரதமருக்கு கடிதம் மேல் கடிதமாக அவர் எழுதுகிறார்.

அனைத்துக் கட்சிக் கூட்டம்: நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்த பிறகு தி.மு.க. அரசு தன்னிச்சையாக எந்த முடிவினையும்

எடுக்கவில்லை. அந்தத் தீர்ப்பு தொடர்பாக எத்தகைய மேல் நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து இரண்டு முறை அனைத்துக் கட்சித்

தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, அதன் பிறகே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போதைய பிரச்னை தொடர்பாக கர்நாடக அரசு

மூன்று முறை அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி முடிவெடுத்துள்ளது. ஆனால் தமிழகத்தில் எதிர்க்கட்சிகள்

வலியுறுத்தியும்கூட தற்போது அத்தகைய அனைத்துக் கட்சிக் கூட்டம் எதுவும் கூட்டப்படவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை வருவாய்

அதிகமாகவே உள்ளது. ஆகவே, தமிழகத்தில் விவசாயிகளைச் சாக விடாமல் காப்பாற்றி, அவர்களின் வாழ்வாதாரத்துக்கு வழி காண வேண்டிய பொறுப்பு அரசுக்குதான் உள்ளது. அரசு இதில் ஈர நெஞ்சத்தோடும், பெருந்தன்மையோடும் செயல்பட வேண்டும். இழப்புக்கு ஆளாகியுள்ள விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் தாராளமாக நிவாரணம் வழங்க வேண்டும்.

தற்கொலை செய்து கொண்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கையை மறைக்க முற்படாமல், அவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணத் தொகையை உடனே வழங்கிடுவதோடு, அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த ஒருவருக்கு அரசுப் பணி அளித்திட வேண்டும் என்று கருணாநிதி கூறியுள்ளார்.

## ஆழியாறு அணையில் இருந்து கேரளத்துக்கு 1.20 டி.எம்.சி. தண்ணீர் வழங்க முடிவு

பரம்பிக்குளம்- ஆழியாறு பாசனத் திட்டத்தின் கீழ் ஆழியாறு அணையில் இருந்து கேரள மாநிலத்திற்கு 1.20 டி.எம்.சி. தண்ணீர் வழங்க இரு மாநில அதிகாரிகளின் பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம்- ஆழியாறு பாசனத் திட்டத்தின் கீழ் ஆழியாறு அணை மற்றும் சோலையாறு அணையில் உள்ள நீரை தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங்கள் ஒப்பந்த அடிப்படையில் பங்கிட்டு வருகின்றன.

ஆழியாறு அணையில் இருந்து 7.25 டி.எம்.சி. தண்ணீரும், சோலையாறு அணையில் இருந்து 12.30 டி.எம்.சி. தண்ணீரும் கேரளத்துக்கு வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஆனால், இந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை போதிய அளவு பெய்யாததால் ஒப்பந்தப்படி கொடுக்க வேண்டிய நீரை வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, நீர் பங்கீடு செய்வது குறித்து தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங்களைச் சேர்ந்த பொதுப்பணித் துறை மற்றும் மின்வாரிய அதிகாரிகளின் பேச்சுவார்த்தை பொள்ளாச்சியில் உள்ள பரம்பிக்குளம்- ஆழியாறு திட்ட அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், கேரள மாநிலத்துக்கு ஆழியாறு அணையில் இருந்து வரும் ஜனவரி 31ம் தேதி வரை 1.20 டி.எம்.சி. தண்ணீர் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இது குறித்து தமிழ்நாடு பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் ரங்கநாதன் கூறியது:

கேரள அரசு சார்பில் சித்தூர் தாலுகாவில் உள்ள விவசாயப் பயிர்களைக் காப்பாற்ற 1.75 டி.எம்.சி. தண்ணீர் வழங்க கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், தண்ணீர் பற்றாக்குறையாக இருப்பதால் 1.20 டி.எம்.சி. நீர் டிசம்பர் 27ஆம் தேதி முதல் ஜனவரி

31ஆம் தேதி வரை ஆழியாறு அணையில் இருந்து மணக்கடவு வழியாக கேரளத்துக்கு வழங்க இரு மாநில அதிகாரிகளின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்றார் அவர்.

கேரள மாநில பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் லத்திகா கூறியது:

ஆழியாறு அணையில் இருந்து கேரளத்துக்கு வழங்கப்படுவதாக உள்ள 1.20 டி.எம்.சி. தண்ணீர் போதுமானதாக இல்லை.

இருப்பினும் சித்தூர் தாலுகாவில் உள்ள பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை காப்பாற்ற இந்த முடிவை எடுத்துள்ளதாகக் கூறினார்.

இரு அணைகளின் நீர்மட்டம்: சோலையாறு அணையின் மொத்தக் கொள்ளளவு 160 அடி. தற்போதைய நீர்மட்டம் 93.94 அடி. நீர்வரத்து விநாடிக்கு 85 கன அடி, நீர் வெளியேற்றம் விநாடிக்கு 406 கன அடி.

ஆழியாறு அணையின் மொத்தக் கொள்ளளவு 120 அடி. தற்போதைய நீர்மட்டம் 87.90 அடி. நீர்வரத்து 153 கன அடி, நீர் வெளியேற்றம் 497 கன அடியாக உள்ளது.

### கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.65 உயர்வு

கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை ஒரு குவிண்டாலுக்கு (100 கிலோ) ரூ.65 உயர்த்தி அறிவித்துள்ளது மத்திய அரசு. இதன்படி குவிண்டாலுக்கு ரூ.1,350 கிடைக்கும்.

இது தவிர 25 லட்சம் டன் கோதுமையை கூடுதலாக ஏற்றுமதி செய்யவும் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. சேமிப்பு கிடங்குகளில் மிகுதியாக உள்ள கோதுமையை காலி செய்யும் வகையிலும், புதிதாகக் கொள்முதல் செய்யப்படும் கோதுமையை பாதுகாப்பாக வைப்பதில் பிரச்னை ஏற்படக் கூடாது என்பதற்காகவும் கூடுதலாக ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தில்லியில் புதன்கிழமை நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு கூட்டத்தில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டது. ஆதரவு விலை உயர்த்தப்பட்ட தகவலை மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த முடிவுகள் அனைத்தும் இப்போது நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டவை அல்ல. கோதுமையை கூடுதலாக ஏற்றுமதி செய்யும் பரிந்துரையை உணவுத் துறை அமைச்சகமும், கோதுமைக்கு கூடுதலாக விலை கொடுக்கும் பரிந்துரையை மத்திய வேளாண்துறை அமைச்சகமும் அளித்திருந்தன.

வேளாண் உற்பத்தி செலவு, விலை ஆணையம் அளிந்த பரிந்துரைப்படி விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு ரூ.100 கூடுதலாக அளிக்க வேண்டுமென்று வேளாண்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் கோரிய அளவுக்கு கூடுதல் விலை கிடைக்கவில்லை.

விவசாயிகள் நிராகரிப்பு: அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையை பஞ்சாப், ஹரியாணா மாநில விவசாயிகள் நிராகரித்துள்ளனர். வேளாண் உற்பத்திச் செலவு வேகமாக அதிகரித்து வரும் சூழ்நிலையில் குவிண்டாலுக்கு ரூ.1,350 என்ற குறைந்தபட்ச ஆதரவு விலையை ஏற்க முடியாது.

இது விவசாயிகளுக்கு அநீதி இழைக்கும் செயல் என்று விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

## இனி என்ன ?

பூமியின் தென்துருவமான அன்டார்டிக், புவிக்கோளத்தின் 20% பரப்பை உள்ளடக்கிய பெரும்பரப்பு. உறைபனிப் போர்வையும், பல்லாயிரக்கணக்கில் மிதக்கும் பனிப்பாறைகளும் காணக்கிடக்கும் இந்தக் கடல்பகுதியில் தற்போது வெப்பம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

1958-இல் இருந்த வெப்பத்தைக் காட்டிலும் தற்போது இருமடங்கு அதிகமாகிவிட்டது. 2.24 டிகிரி கூடியுள்ளது. இதனால் பனிப்போர்வைக்கு அடியில் பிளவுகள் ஏற்படத் தொடங்கிவிட்டன.

கடந்த ஜூலை மாதம், அன்டார்டிக் பனிப் போர்வைக்கு அடியில் மிகப்பெரிய பிளவு இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். அதாவது 1.5 கிலோ மீட்டர் ஆழம், 10 கிலோ மீட்டர் அகலம், 100 கிலோ மீட்டர் நீளத்துக்கு இந்தப் பிளவு இருக்கிறது. கடலுக்குள்ளான மாற்றத்தை ராடார் உதவியுடன் ஆய்வுசெய்யும் விஞ்ஞானிகள் இவற்றை மிகத் துல்லியமாக தெரிவித்துள்ளனர்.

இந்தப் "பெரும்பள்ளம்' அல்லது பெரும் பிளவினால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப பனிப்போர்வை கரைந்து உருகும் என்று கூறும் ஆராய்ச்சியாளர்கள், "நிச்சயமாக இதனால் கடல் மட்டத்தில் மாற்றம் ஏற்படும்' என்றும், "கடல் நீர்மட்டம் உயர்ந்து பல தீவுகள் மூழ்கிப்போகலாம், சில கடலோர நகரங்களையும் கடல் விழுங்கும்' என்கிறார்கள். ஆனால், அது இப்போது நடக்காது. சில தலைமுறைகள் ஆகும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

பசிபிக் பெருங்கடல் மற்றும் தெற்குக் கடலில் ஏற்பட்டுள்ள வெப்பக் காற்றின் காரணமாகத்தான் அன்டார்டிக் பகுதியில் வெப்பம் அதிகரித்துள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறினாலும், இந்த நிலைமைக்குக் காரணம் மனிதர்களின் தவறுகளா? என்று கேட்டால் மழுப்புகிறார்கள். அப்படியும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம் என்பதுதான் அவர்களது பதில்.

இங்கே ஆராய்ச்சிக்கூடங்கள் அமைத்திருப்பதும், அதிநவீனக் கருவிகள் கொண்டு ஆய்வுகள் செய்வதும் அமெரிக்கா, ரஷியா, கனடா, டென்மார்க், நார்வே ஆகிய நாடுகள்தான். வளர்ந்த நாடுகளின் விஞ்ஞானிகள் தங்கள் நாட்டைக் காட்டிக்கொடுப்பார்களா?

புவிவெப்பம் அதிகரிக்கக் காரணம் வளர்ந்த நாடுகளின் சுயநலத்தால் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்புகள்தான். புவிவெப்பம் உயர்வதை 2 சென்டிகிரேட் அளவுக்கும் கீழாக, கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமானால், வளர்ந்த நாடுகள் தங்களது கரியமிலவாயு வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால், அவர்கள் அந்தச் சுமையை வளரும்நாடுகள் மேல் போட்டுவிட்டு, அன்டார்டிகாவில் ஆராய்ச்சி செய்கிறார்கள். நம்மை அச்சுறுத்துகிறார்கள்.

புவிப்போர்வையைப் பாதிக்கும் கரியமில வாயுவைக் காட்டிலும், மிக மோசமானது மீதேன் வாயு. இந்த மீதேன்வாயு வேளாண்மையில்தான் அதிகமாக வெளிப்படுகிறது. குறிப்பாக நெல் சாகுபடியில்! ஆகவே, வேளாண்மையில் சில கட்டுப்பாடுகளை விதித்து, புவிவெப்பத்தைக் குறைக்கலாம் என்று வளர்ந்த நாடுகள் கூறியதை உலகின் எந்த நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் என்பதால் இதற்கு இந்தியா உள்பட வளரும் நாடுகள் அனைத்தும் எதிர்ப்பு தெரிவித்தன.

இருப்பினும்கூட, இந்த முடிவைக் கைவிடாமல், அடுத்த கூட்டத்தில் விவாதிக்க இருக்கிறார்கள்.

இதற்கிடையில், அரிசி சாப்பிடும் ஆசிய நாடுகளின் உணவுத்தட்டுப்பாட்டை நீக்க ""அரிசிக்கு மாற்றாக உருளைக்கிழங்குதான் மிகநல்ல உணவு; இதற்குத் தண்ணீர் தேவை மிகவும் குறைவு" என்று ஐரோப்பாவில் நடந்த உருளைக்கிழங்கு மாநாட்டில் இப்போதே பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

அடுத்த எட்டு ஆண்டுகளில் கரியமில வாயு குறைப்புக்கான எந்தவித சரியான திட்டமும் இல்லாமல், போதிய நிதியையும் ஒதுக்காமல், புதிய தொழில்நுட்பங்களையும் வழங்காமல் இன்னமும் பேசிக்கொண்டே இருக்கின்றன வளர்ந்த நாடுகள்.

இது ஒருபுறம் இருக்க நம்முடைய கவலையெல்லாம் கங்கை நதிக்கு மூலாதாரமாகிய கங்கோத்ரி வேகமாக உருகத் தொடங்கிவிட்டது; யமுனை நதிக்கு ஆதாரமான கோமுக் பனிச்சிகரம், தனது "பசுமுகத்தை' இழந்துவிடும் அளவுக்கு உருகிவிட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவதுதான். கடந்த பத்து ஆண்டுகளில் இவ்வாறு இருசிகரங்களும் வேகமாகக் கரைவது அதிகமாகிவிட்டது.

உலகளாவிய புவிவெப்பம் இமாலயத்தையும் பாதிக்கிறது. வளர்ந்த நாடுகளின் சுயநலத்துக்கு எங்கோ இருக்கும் கங்கோத்ரியும் கோமுக் சிகரமும் வேகமாகக் கரைகின்றன. அன்டார்டிக் பனிப் போர்வைக்கு அடியில் உறைந்த கடல் பாளம் பாளமாகப் பிளந்து நிற்கிறது. கடல்காற்று வெப்பமாகிறது. பருவமழையை பெரும் புயல் விரட்டுகிறது.

உலகத்தில் ஏதோ ஒரு நாடு, சுற்றுச்சூழலுக்கு எதிராக எதையோ செய்கிறது என்று சும்மா இருக்க முடியாது. அதனால் புவி முழுவதையும் பாதிக்கும் என்பதற்கு இது ஒரு உதாரணம். இந்த இயற்கை மகத்தானது. தன்னைச் சீர்குலைக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எதிர்வினையை முன்வைக்கிறது. "நான் அசைந்தால் அசையும் அகிலம் எல்லாமே' என்று சொல்லும் சக்தி படைத்த இயற்கை மனிதருக்குச் சொல்லாமல் சொல்கிறது. ஆனால் மனிதனோ, ""நான்" எனும் அகந்தையை நடத்துவோனாகவே நீடிக்கிறான்.

 அனுபவிப்பதுவரை அனுபவித்துவிட்டு நாம் போய்விடுவோம், வருங்கால சந்ததியினர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்று நாம் வாளாவிருந்துவிட முடியாது. நமது முன்னோர்கள் நாம் சந்தோஷமாக வாழ மாசுபடாத பூமியை விட்டுச் சென்றனர். நாமும் நமது சந்ததியினருக்கு மாசுபடாத பூமியை விட்டுச் செல்வதுதானே நியாயமாக இருக்கும். நாம் ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டிய இன்றியமையாத பிரச்னை இது!

**வீழ்ச்சியின்  வெற்றி !**

பெருகிவரும் வெப்பத்தால் காலநிலை தடுமாறுகிறது. இயற்கையின் ஆட்டம் போதாது என்று நம்மை ஆளும் முற்போக்குக் கூட்டணி போடும் ஆட்டம் தாங்க முடியவில்லை. தடுமாறும் தட்பவெப்பத்திற்கு ஏற்ப, சில்லறைத்தனமான வர்த்தகத்தில் அன்னிய முதலீடுகளை வரவேற்கும் மசோதா நாடாளுமன்றத்தில் வெற்றிகரமான ஒப்புதலைப் பெற்றதன் மூலம் குளிர்காலத்தில் வசந்தம் வருமா என்று எதிர்பார்க்கிறார்கள். வசந்தம் என்பது எட்டாத கனவு. இந்தியப் பொருளாதாரம் மைனஸ் டிகிரி கடுங்குளிரில் சிக்கியுள்ளது ஏனோ உணரப்படவில்லை.

 மறுபடியும் மணிலாவை மையமிட்டுள்ள ஆசிய வளர்ச்சி வங்கி, நடப்பு நிதி ஆண்டின் வளர்ச்சி வீதத்தை 5.4 சதவீதம் ஆகக் குறைத்து இந்தியப் பொருளாதாரம் ரத்தசோகை நோயில் வீழ்ந்துவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளது. நுகர்வு, முதலீடு, தொழில் உற்பத்தி ஆகிய மூன்றும் மந்தித்துவிட்டன.

 கடந்த ஆண்டு  2011-12-இல் வளர்ச்சி வீதம் 6.5 என்ற நிலை 5.4 சதவீதமான வீழ்ச்சி வெற்றிபெற்று, வளர்ச்சி தோற்றுவிட்டது. வீழ்ச்சியை மீட்டும் கசப்பு மாத்திரையாகிய வால்மார்ட்டை வரவேற்கப் பாடுபடும் "தில்லை அம்பல நடராஜர்' மொத்தவிலைக் குறியீட்டெண் 7.24 ஆகக் குறைந்துள்ளதை வைத்து அற்ப சந்தோஷம் பெறலாம்.

 குறைந்த நுகர்வுச் சந்தையின்மை போன்ற எதிர்மறைக் காரணங்களை மறந்துவிடும் அய்யன், மாற்றமில்லாமல் மேலே மேலே போகும் சில்லறை விலைக் குறியீட்டெண்ணைக் கணக்கில்கொண்டால் பணவீக்கம் புலப்படும். "அதற்குத்தான் வால்மார்ட்' என்று போடு போடுவார்.

வீழ்ச்சியின் வெற்றிக்குரிய காரணிகளைக் கண்டறிவது கடினமல்ல. வீழ்ந்துவிட்ட பொருளாதாரத்தைத் தலைநிமிர்த்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் இலக்கு மேலும் வீழ்ச்சியை உறுதிப்படுத்தக்கூடியதும், ஓட்டு வங்கியை உயர்த்தக்கூடியதுமான அரசியல் நடவடிக்கைதானே தவிர பொருளாதார வளர்ச்சிக்குரிய நடவடிக்கை அல்ல.

""வால்மார்ட் வந்தால் நுகர்வோர் நலம் பெறுவர். வால்மார்ட் வந்தால் விவசாயிகள் நலம் பெறுவர். உர மானியம், உணவு மானியம் எல்லாம் பணமாகத் தருகிறோம் என்றெல்லாம் காதில் பூச்சுற்ற "ஆதார்' அட்டைகள் துரித கதியில் வழங்கப்படுகின்றன.

நிஜமான குறி இலக்கு தொழில் வளர்ச்சியில் இருக்க வேண்டும். தும்பைவிட்டு வாலைப் பிடிப்பது அரசின் வாடிக்கைதான். வால்மார்ட் மாடு பயிரை மேய்ந்துவிடுமே என்ற கவலை யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

வளர்ச்சிக்குத் தேவையான சீர்திருத்தம் என்று கூறி, மேலும் மேலும் அமெரிக்கா அல்லது அன்னிய முதலீடுகளை மருந்து, இன்சூரன்ஸ், வங்கி போன்ற துறைகளில் நுழையவிட்டு, லாபத்தை விட்டுக்கொடுத்து விபரீதங்களை விலைக்கு வாங்கக்கூடாது; நம் நாட்டுக்குள்ளேயே மின்சாரம், நிலக்கரி, சுரங்கம் போன்ற துறைகளில் துரித உற்பத்திக்கான சீர்திருத்தங்களைச் செய்தால்தான் நாம் தொழில்துறை, பொருளாதாரத்துறை வீழ்ச்சியிலிருந்து மீள முடியும்.

உதாரணமாக, கர்நாடக மாநிலத்தில் சுரங்கத் தொழிலுக்குத் தடை விதிக்கப்பட்டதால் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளுக்குப் போதிய கச்சாப் பொருள்கள் / மூலப்பொருள்கள் கிட்டாததால் படிப்படியாக ஆலைகளை மூடி வருகிறார்கள்.

இரும்புத்துறைசார்ந்த ஏராளமான யூனிட்டுகள் ஹோசூரில் உள்ளன. மின்சார வழங்கல் போதுமானதாக இல்லை. "பவர்-கட்' செய்யவேண்டியதுதான். பகல் நேரத்தில் விட்டுவிட்டு மின்சாரம் வழங்கப்படுவதால் ஷிப்டு முறை சாத்தியப்படுவதில்லை. மின்சாரம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, வேலை செய்தாலும் சரி, வேலை செய்யாவிட்டாலும் சரி தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுத்தாக வேண்டும்.

வேலையில்லாத நேரத்திற்கும் சம்பளம் கொடுத்துக் கட்டுப்படி ஆகாததால் ஹோசூரில் பல தொழில் யூனிட்டுகள் மூடப்பட்டு விட்டன.

திருப்பூரிலும் அதே நிலை. ஆடைகள் ஏற்றுமதிக்கு வழி இருந்தும் லாபத்துக்கு வழி இல்லை. அப்படியே விட்டுவிட்டு மின்சாரம் வந்தாலும் குறைந்த அழுத்தமாக வேறு வருகிறது.

இதனால் ஜெனரேட்டரை இயக்கி வேலை செய்யப்படும்போது மின்செலவு கூடுதலாகி, உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. தொழில் வீழ்ச்சி என்பது இதுவே.

மாநில அரசு மத்திய அரசிடமிருந்து மின்சாரம் எதிர்பார்க்கிறது. வடக்கிலிருந்து மின்சாரம் பெறுவதற்கான மின்தடம் பழுதடைந்துவிட்டதாகக் காரணம் சொல்லப்படுகிறது.

அதுதான் பிரச்னையென்றால் அதில் கவனம் செலுத்தாமல் வால்மார்ட் மீதும், பங்குச்சந்தை மீதும் மத்திய அரசு குறிவைத்து நாடகம் போடுவது நாட்டுக்கு நல்லதல்ல. தொழில்ரீதியான முன்னேற்றமே நாட்டின் தேவை. விவசாயத்தை இழந்துவிட்ட தமிழ்நாடு தொழிலிலும் நகரமயமாதலிலும் முன்னேற்றம் பெற்றுவருவதும் சூனியமாகும் அபாயத்தை "அரசியல்ரீதியாக' நோக்காமல் வளர்ச்சியின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தும் இலக்கில் நோக்க வேண்டும்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் பங்கு வகிக்கும் மத்திய அமைச்சர்களுக்கும் தமிழ்நாட்டு வளர்ச்சியில் தங்களுக்கும் பங்கு உண்டு என்ற உணர்வுடன் போதிய மின்சாரத்தைப் பெற்றுத் தருவதில் மாநில அரசுடன் ஒத்துழைப்பதுதான் நல்ல தார்மிக அரசியல் உதாரணமாக இருக்கும். மையமும் மாநிலமும் ஒருவரை ஒருவர் பழிசுமத்தும் போக்கு விரும்பத்தக்கதல்ல.

தமிழ்நாடு மட்டுமல்ல. மகாராஷ்டிர மாநிலத்திலும் மும்பை நகரத்துக்கு வெளியே மின்தடை 8 மணி நேரம் கடைப்பிடிக்கப்பட்டு ஓசூர், திருப்பூர் நிலைமை அங்குள்ள தொழிற்பேட்டைகளிலும் உள்ளது.

தொழில்துறை மேதைகளான டி.டி. கிருஷ்ணமாச்சாரி, ஆர். வெங்கட்ராமன் போன்றோர் வழங்கியுள்ள அடித்தளம் - அதாவது இந்தியாவில் தொழிற்பேட்டைகள், ஆயிரக்கணக்கான சிப்காட்டுகள் எல்லாம் ஆடிப்போய்விட்டன. அம்பத்தூர், கிண்டி போன்ற எண்ணற்றவை வெறிச்சோடிவிட்டன.

உண்மையில் இவைதான் இந்தியத் தொழிற்புரட்சிக்கு வித்திட்டவை. மைக்ரோ, ஸ்மால், மீடியம் என்று சொல்லப்படும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இந்தியவில் 26 மில்லியன்கள் உண்டு.

தொழில் துறையில் இவற்றின் பங்களிப்பு 45 சதவீதம் என்றாலும் கனரகத் தொழில் நிறுவனங்களுக்கும், கட்டமைப்புத் துறைகளுக்கும் மட்டுமே சலுகைகளும் முன்னுரிமைகளும் அள்ளிவிடப்படுகின்றன. எல்லா சிறு நிறுவனங்களிலும் உள்ள மாபெரும் பிரச்னை பவர்கட், போதிய மூலப்பொருள் இல்லாமை.

எங்கு சீர்திருத்தம் தேவையோ அங்கு எதுவும் செய்யப்படவில்லை. நிலக்கரி மற்றும் பல்வேறு உலோகச் சுரங்கங்களில் பணி நிகழவில்லை. இவையெல்லாம் பொதுத்துறையில் உள்ளன. நிர்வாகச் சீர்கேடு, ஊழல் காரணமாக நம் நாட்டு மூலப்பொருள்களை நாம் பயன்படுத்தாமல் இங்குள்ள பன்னாட்டுப் பெருந்தொழில் முதலைகளின் மூலப்பொருள் தேவைகளை இறக்குமதி செய்து நிறைவேற்றப்படும் கொடுமையை என்னவென்று சொல்ல? உள்நாட்டில் நிலக்கரி இருந்தும் மின் உற்பத்தி இல்லை. மின் உற்பத்தி செய்ததைக் கொண்டு செல்ல மின்தடம் இல்லை. ஏன் என்று கேட்டால் மின்திருட்டு, மின்கடத்தி வழங்கலில் இயந்திரக் கோளாறு என்று பொறுப்பற்ற பதில்களை வழங்கிவிட்டுச் சில்லறை வணிகத்திற்கு வால்மார்ட் வந்துவிட்டால் மின்தட்டுப்பாடு நீங்கிவிடும் என்று மணீஷ் திவாரி பேசினால் வியப்படைய ஒன்றுமில்லை. எல்லாம் வீழ்ச்சியின் வெற்றியைப் பறைசாற்றும் அறிகுறியே.

இந்தியாவில் இரண்டு வகையான மக்கள் உள்ளனர். பணம் உள்ளவர்கள் என்றும் பணம் இல்லாதவர்கள் என்றும் பிரித்து நோக்கும்போது இரண்டு சாராருமே உலகப் பொருளாதாரத்தின் சரிவு பற்றிய விவரம் அறிந்தவர்களாகத் தெரியவில்லை. மூன்றாவதாக ஒரு பிரிவு உள்ளது. அவர்கள் அதிகாரவர்க்க அரசியல்வாதிகள், கறுப்புப்பண முதலைகள். இவர்களுக்கு எல்லாம் தெரியும். நோக்கமோ வளர்ச்சி பற்றியதல்ல. "வளர்ச்சி' என்று சொல்லி எவ்வளவு "வளைக்க' முடியும் என்று நினைப்பவர்கள். உலக வர்த்தகமே ஸ்தம்பித்துவிட்டது.

மேலை நாடுகளில் உள்ள பல நிறுவனங்கள் பணியில் இருந்தவர்களில் குறிப்பிட்ட சதவீதம் பணி நீக்கம் செய்துவிட்டதாகக் கூறி, ""இந்தியா பத்திரமாக உள்ளது. இங்கு அப்படி எதுவும் நிகழவில்லை..." என்றும் கூறி மகிழலாம்.

மேலை நாடுகளில் பணி நீக்கம் செய்து இழப்பீடும் வழங்குவார்கள். இந்தியாவில் பணியும் நிகழவில்லை. வேலைநீக்கம் என்ற பிரச்னையும் இல்லை. மக்களுக்கு வேலையே வழங்காதபோது பணிநீக்கம் என்பது எப்படி ஒரு பிரச்னையாகும்? நிரந்தரமற்ற பணிகள் நிரந்தரமாக உண்டு.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி முதல்கட்ட ஆட்சியில் 2004-2008-ஆம் ஆண்டுகளில் ஜி.டி.பி. வளர்ச்சி 10 முதல் 13 சதவிகிதம் என்று மகிழ்ந்து வந்த நிலை தடுமாறி 2011-12-இல் 6.5 சதவிகிதமாகி, 2012-13-இல் 5.4 சதவிகிதமாக மீண்டும் குறைந்துள்ளதே!

"ரெப்போ' வட்டியைக் குறைக்க மறுக்கும் ரிசர்வ் வங்கி மீது பாய்ந்து என்ன பயன்? பணவீக்கத்தை மேலும் வளர்ப்பதால் வளர்ச்சியுறுமா? கறுப்புப்பண வளர்ச்சிக்கு வித்திட இந்தியச் சந்தைகளை வால்மார்ட்டுக்கு விற்று அமெரிக்க வளர்ச்சிக்குப் பாடுபடும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் அணுகுமுறைகளை வாழ்த்தவா முடியும்?

""வளர்ச்சியில் தோல்வியுற்று, வீழ்ச்சியில் வெற்றிபெற்ற" அணியை வீழ்த்த - வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல் முடிவு நல்ல பதில் வழங்கும் என்று காத்திருப்போம். வாழ்க பாரதம்.

## வாழையில் புதிய தொழில்நுட்பங்கள்



வாழையில் அறுவடைக்குப் பின் புதிய தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதலாக 25 முதல் 40 சதவீதம் வருவாய் பெறலாம் என்று வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவில் அதிக அளவு உற்பத்தி செய்யப்படும் பழங்களில் வாழை இரண்டாவது இடத்தை வகிக்கிறது. நமது நாட்டில் கணிசமான அளவு வாழைப் பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் தமிழ்நாடு முக்கியப் பங்கு வகிக்கிறது.

விரைவில் கெட்டுவிடும் தன்மை கொண்ட வாழைப் பழத்தை நீண்ட நாள் சேமித்து வைக்க அதன் பச்சை நிறம் மாறாமல் இருக்க வேண்டும். அத்தகைய தரம் கொண்ட வாழைப் பழத்தைத்தான் நீண்ட தொலைவுக்கு எடுத்துச் செல்ல முடியும். வாழைப் பழங்களைப் பாதுகாக்க மற்ற பழங்களைப் போல அல்லாமல் பாதுகாப்பு அறையின் வெப்பநிலை 12 முதல் 21 சென்டிகிரேட் வரை இருக்க வேண்டும். குறைந்த வெப்பநிலையில் பாதுகாக்கும் போது அதன் தரம் பாதிக்கப்படுகிறது.

தொழில்நுட்பங்கள்: அறுவடைக்கு முன்னரும், அதன் பின்னரும் கடைப்பிடிக்கப்படும் தொழில் நுட்பங்களே பழங்களின் வாழ்நாளை அதிகரிக்கச் செய்கிறது. தொழில் நுட்பங்களைச் சரியாகக் கையாளாத காரணத்தால் மொத்த உற்பத்தியில் 18 முதல் 20 சதவீதம் வாழை வீணாகிறது.

உள்ளூர் விவசாயிகள் சந்தைகளுக்கு வாழைப் பழத்தை எடுத்துச் செல்லும்போது ஏற்படும் சேதத்தைத் தவிர்க்க வாழை இலை அல்லது பாலித்தீன் பையால் முழுவதும் மூடியே எடுத்துச் செல்கின்றனர்.

ஆனால், ஏற்றுமதி செய்யும்போது பழங்களுக்கு சேதம் விளைவிக்காத வகையில், பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட அட்டைப் பெட்டிகளில் அடைத்து அனுப்ப வேண்டும்.

இந்த அட்டைப்பெட்டி 57 ஷ் 30 ஷ் 22.5 செ.மீ. அளவுடையது. இதில் 1.3 செ.மீ. விட்டமுடைய 10 சிறு துளைகள் இருக்கும். இதில் வாழை சீப்புகளை அதன் அடிப்பாகம் கீழிருக்குமாறும், காய்கள் மேல் நோக்கி இருக்குமாறும் நீளவாக்கில் அடுக்க வேண்டும்.

இவற்றை ரயில்கள் மூலம் அனுப்பும்போது ஒன்றின் மேல் ஒன்றாக 9 பெட்டிகள் இருக்குமாறு அடுக்க வேண்டும். 10 டன் கொள்ளளவுள்ள ரயில் பெட்டியில், 100 வாழைப் பெட்டிகளை அடுக்க முடியும். ஒரு டிரக்கில் குறைந்தது இத்தகைய பெட்டிகளை 350 வரை அடுக்க முடியும்.

வெப்ப நிலை: வாழைப் பழங்களை 13 டிகிரி செண்டிகிரேடுக்கு கீழ் உள்ள வெப்பநிலையில் வைத்து சேமிக்கும்போது பழத்தின் தோலில் கருப்பு நிறப் புள்ளிகள் தோன்றும். இது குறைந்த வெப்பநிலையால் ஏற்படும் குறைபாடாகும். இந்தக் குறைபாடுள்ள பழங்கள் பழுத்த பின்னரும் அதன் தோல் கடினமாக இருக்கும்.

மேலும், இந்தப் பழங்கள் எளிதில் பூஞ்சண நோய்த் தாக்குதலுக்கு ஆளாகின்றன. எனவே, இந்த வெப்பநிலையில் பழங்களை சேமிப்பது ஏற்றதல்ல.

ரோபஸ்டா மற்றும் குள்ள வாழைத் தார்களை பூத்த 100 நாள்களுக்குப் பின்னால் வெட்டி, முன் சேமிப்பு நேர்த்தியாக 1,000 பி.பி.எம். தயோபென்ட்சோல் என்ற மருந்தில் வாழை சீப்புகளை நனைக்க வேண்டும்.

அவ்வாறு சேமிக்கும்போது, அதிகபட்சமாக 28 நாள்கள் 13 முதல் 15 செண்டிகிரேட் வெப்பநிலையில் எந்தவிதச் சேதமும் இல்லாமல் சேமிக்க இயலும். 13 முதல் 15 செண்டிகிரேட் வெப்பநிலையில், 80 முதல் 90 சதவீத ஈரப்பதமும் பழங்களை சேமிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையாக இருக்கும். வெப்பநிலை அதிகரிப்பதால் பழங்கள் விரைந்து பழுத்து விடும்.

மெழுகு பூசுதல்: பழங்களின் வாழ்நாளை அதிகரிக்க 6 சதவீத மெழுகுக் கரைசலில் சீப்புகளை 30 முதல் 60 விநாடிகள் நனைத்து எடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் பழங்கள் பழுப்பது தடைபடுவதுடன் அதன் மணமும், சுவையும் அதிகரிக்கும். இதை 12 சதவீத மெழுகில் மீண்டும் ஒரு முறை நனைத்து எடுப்பதால் பழங்களின் வாழ்நாளை 5 வாரங்களுக்கு மேல் நீட்டிக்க முடியும்.

மேலும், வாழைச் சீப்புகளை பாலித்தீன் பைகளில் 50 கிராம் பொட்டாசியம் பெர்மாங்கனேட்டுடன் சேமிக்கும்போது குறைந்த வெப்பநிலையான 13 முதல் 15 செண்டிகிரேட் வெப்பநிலையில் 4 வாரங்களும், வெளி அறை வெப்பநிலையில் 2 வாரங்களும் பழங்களை பழுக்காமல் பாதுகாக்க முடியும்.

பாலித்தீன் பைகளால் மூடுதல்: பழங்களை காற்றோட்டமில்லாத பாலித்தீன் பைகளைக் கொண்டு மூடும் போது பழங்கள் பூஞ்சண நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. 100 காஜ் தடிமனுள்ள பாலித்தீன் பைகளில் 2 சதவீத காற்றோட்ட வசதி செய்து, பழங்களை

மூடும்போது வெளி அறை வெப்பநிலையிலும், குறைந்த வெப்பநிலையிலும் (13 முதல் 15 சென்டிகிரேட்) பழங்களை 21 நாள்கள் முதல் 28 நாள்கள் வரை பாதுகாக்க இயலும்.

தாவரங்களின் பங்கு: கொக்கோ இலை அல்லது உமியுடன் சேர்த்து வாழைச் சீப்புகளை குறிப்பாக சமையலுக்கான வாழைக் காய்களை பைகளில் சேமிக்கும்போது 30.2 சென்டிகிரேட் வெப்பநிலையில் இரு வாரங்களும், 20.2 சென்டிகிரேட் வெப்பநிலையில் 4 வாரங்களும் தரம் குறையாமல் சேமிக்க இயலும்.

வாழைத் தார்களை மூடுவதற்கு ஊதா நிற பைகளுக்குப் பதிலாக வெள்ளை நிறப் பைகளே சிறந்தது.

இந்தப் பைகளில் அடைப்பதன் மூலம் பழுப்பதற்கு எடுத்துக் கொள்ளும் நாள்கள் குறையும். மேலும், பழங்களில் பாதிப்பும் குறைவாக இருக்கும்.

இத்தகைய புதிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் வாழை விவசாயிகள் தங்கள் வருவாயில் 25 முதல் 40 சதவீதம் கூடுதலாக ஈட்ட முடியும் என்கின்றனர் வேளாண் அலுவலர்கள்.

தொடர்புக்கு...: தருமபுரி வருவாய் கோட்டத்தின் வேளாண் அலுவலர் (வேளாண் வணிகம்) தா.தாம்சன். மொபைல் எண்: 94435 63977.

## புறக்கடை முறையில் நாட்டுக் கோழி வளர்ப்பு



குறைந்த முதலீடு, குறைந்த தீவனச் செலவுடன், மண் வளத்தை மேம்படுத்தக் கூடிய புறக்கடை முறையில் நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி நிர்வாகம் பல்வேறு வழிமுறைகளைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கல்லூரியின் விரிவாக்கத் துறை பேராசிரியர்கள் என்.நர்மதா, எம்.சக்திவேல், எம்.ஜோதிலட்சுமி ஆகியோர் கூறியது:

கோழிகளை பகல் முழுவதும் திறந்த வெளியில் இரை தேட வைப்பதே புறக்கடை முறையில் நாட்டுக் கோழி வளர்க்கும் முறையாகும். இந்த முறையில் வீடுகளிலுள்ள நெல், அரிசிக் குறுணை, கம்பு, சோளம், எஞ்சிய சமைத்த உணவுகளைத் தீவனமாக அளிக்கலாம். எனினும், இந்த முறையில் அதிக எண்ணிக்கையில் கோழிகளை வளர்க்க முடியாது.

புறக்கடையில் நாட்டுக் கோழி வளர்ப்பில் இனப் பெருக்கத்துக்காக எந்தவொரு தனிக் கவனமும் செலுத்தத் தேவையில்லை. அந்தந்தப் பகுதியில் பலமுள்ள சேவல்கள் மூலமாகவே இனப் பெருக்கத்துக்கு தயாராகின்றன.

இதற்காக உடல் எடையின் அடிப்படையில் சேவல்களைத் தேர்வு செய்வது அவசியமாகும்.

முட்டை சேகரித்தல்..: பெட்டைக் கோழிகள் 20 வார வயதில் முட்டையிடத் தொடங்கும். பெரும்பாலும் பகல் நேரத்திலேயே முட்டையிடும். எனவே, காலையில் இரண்டு முறையும், பகலில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும் முட்டைகளைச் சேகரிக்க வேண்டும்.

முட்டைகளை உப்புச் சட்டியில் அல்லது அரிசிப் பானைகளில் அடைத்து வைக்கக் கூடாது. இதனால், சுமார் 50 சதவீதம் முட்டைகள் குஞ்சு பொரிக்கும். முட்டைகளின் குஞ்சு பொரிக்கும் திறனை அதிகரிக்க, இரும்புச் சட்டியில் மணல் பரப்பி தண்ணீர் தெளித்து அதன் மேல் சாக்கைப் போட வேண்டும். பிறகு முட்டைகளை அதன் மேல் வைத்து பருத்தித் துணி கொண்டு மூடவேண்டும். இதன் மூலம் முட்டைகளின் குஞ்சு பொரிக்கும் திறன் 97 சதவீதம் வரை இருக்கும்.

அடை வைத்தல்..: மூங்கில் கூடைகள் அல்லது அகலமான இரும்புச் சட்டியைப் பயன்

படுத்தி அடை வைக்கலாம். அடை வைக்கும் கூடையை ஒரு அறையின் இருண்ட பகுதியிலேயே வைக்க வேண்டும். வெளிச்சம் அதிகம் இருந்தால் கோழிகள் சரியாக அடைக்கு உதவாது.

மேலும், கோழிகளுக்குத் தகுந்தாற்போல் 10 முதல் 15 முட்டைகள் வரை மட்டுமே அடைக்கு வைக்க வேண்டும். அதிகமான முட்டைகள் வைத்தால் குஞ்சு பொரிக்கும் திறன் குறையும்.

அடை காக்கும் கோழிகளில் புற ஒட்டுண்ணிகளின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் கோழிகளை தினமும் சிறிது நேரம் வெளியில் சென்றுவர அனுமதிக்க வேண்டும். அடை வைத்த 7ஆம் நாள் முட்டைகளில் கரு கூடிவிட்டதா எனக் கண்டறிந்து, கரு கூடாத முட்டைகளை உணவுக்காகப் பயன்படுத்தலாம்.

தீவனப் பராமரிப்பு..: புறக்கடை முறையில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு சில நேரங்களில் போதுமான ஊட்டச் சத்து கிடைக்காமல் போகக்கூடும்.

எனவே, மேய்ச்சலால் கிடைக்கும் உணவுப் பொருள்களுடன் கோழிகளுக்குக் குருணை அரிசி, தானியங்கள், வைட்டமின், கால்சியம், பாஸ்பரஸ் போன்ற கனிமக் கலவைப் பொருள்களையும் தர வேண்டும். மேலும், புறக்கடையில் வளர்க்கப்படும் கோழிகளுக்குப் புரதச் சத்து நிறைந்த தீவனமாக உள்ள பானைக் கரையான், அசோலா ஆகியவற்றையும் வழங்கலாம் என்று தெரிவித்துள்ளனர்.

## யானைகளால் சேதமடைந்த நிலங்களின் உரிமையாளர்களுக்கு நிவாரணம்

பழனியில் காட்டுயானைக் கூட்டத்தால் சேதமடைந்த நில உரிமையாளர்களுக்கு நிவாரணம் புதன்கிழமை வழங்கப்பட்டது.

பழனியருகே கொடைக்கானல் மலையடிவாரப் பகுதியில் காட்டுயானைகள் கூட்டம், கூட்டமாக சுற்றித் திரிகின்றன. இந்த யானை கூட்டம் விவசாய நிலங்களுக்குள் புகுந்துவிடாமல் அகழி, சோலார் தடுப்பு வேலி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. என்றாலும் சில வேளைகளில் யானைகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை நாசப்படுத்திவிடுகின்றன. கடந்த சிலமாதங்களுக்கு முன் புளியமரத்துசெட் மற்றும் அய்யம்புள்ளி பகுதிகளில் காட்டுயானைகள் புகுந்து மொட்டையாண்டி என்பவர் குடிசை வீடு, ஆறுமுகம், நாகராஜன், முருகன், ஜேசுமேரி, சையது இப்ராகீம் ஆகியோரது

தோட்டத்தில் இருந்த மா, தென்னை, இலவம் மரங்களை சேதம் செய்தன. இதைத் தொடர்ந்து வனத்துறை சார்பில் பயிர்ச்சேதம், உடமைகள் சேதமடைந்த ஆறு பேருக்கும் மொத்தம் ரூ. 14 ஆயிரத்து 800 ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது. பழனி வனத்துறை அலுவலகத்தில் புதன்கிழமை மேற்குறிப்பிட்ட ஆறு பேருக்கும் ரேஞ்சர் கணேசன் இழப்பீட்டுக்கான காசோலைகளை வழங்கினார். பாரஸ்ட்டர் சையது இப்ராகிம் உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### தற்கொலை செய்த விவசாயி குடும்பத்துக்கு எம்.எல்.ஏ. நிதி உதவி

விருதுநகர் அருகே கடன் சுமையால் தற்கொலை செய்து கொண்ட விவசாயின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறி நிவாரண நிதியாக ரூ.25 ஆயிரம் வழங்கினார் சட்டப்பேரவை உறுப்பினர் க.பாண்டியராஜன்.

விருதுநகர் அருகே உள்ள புதுக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர் பாண்டி. இவர் தனது விவசாய நிலத்தில் கடன் வாங்கி பயிர் செய்திருந்தாராம்.

இந்நிலையில் போதிய மழையில்லாத நிலையில் பயிர்கள் கருகியுள்ளது. இதைக் கண்டு கவலையடைந்த பாண்டி சில நாள்களுக்கு முன் தனது தோட்டத்தில் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

இந்நிலையில் விருதுநகர் சட்டப்பேரவை உறுப்பினர் க.பாண்டியராஜன் தனது ஆதரவாளர்களுடன் புதுக்கோட்டை கிராமத்திற்கு நேரில் சென்று பாண்டியின் மனைவி அழகுலட்சுமி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். பின்னர் அவர் சொந்த நிதியிலிருந்து ரூ.25 ஆயிரத்திற்கான காசோலையையும் வழங்கினார்.

இது தொடர்பாக அவர் கிராம மக்களிடையே பேசுகையில், இப்பகுதியில் போதிய மழையில்லாத நிலையில் பயிர்கள் கருகி வருகின்றன. இதனால் கவலையடைந்து விவசாயிகள் விபரீதமான முடிவுவை எடுக்க வேண்டாம். விவசாயிகளுக்கான இழப்பீட்டு தொகையை வழங்குவதற்கு அரசை வலியுறுத்துவேன் என்றார் க.பாண்டியராஜன். அவருடன் புதுக்கோட்டை கிராம ஊராட்சியின் தலைவர் சந்திரன் மற்றும் தேமுதிக கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

27.12.2012 A.M

**கால்நடை மருத்துவமனைஅமைக்க விவசாயிகள் கோரிக்கை**

ஊத்தங்கரை: "ஊத்தங்கரை அடுத்த பாவக்கல்லில், கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.ஊத்தங்கரை யூனியன், பாவக்கல் பஞ்சாயத்தில் கரியபெருமாள் வலசை, புளியம்பட்டி, நல்லவம்பட்டி, பாவக்கல் என நான்கு வருவாய் கிராமங்களும், எட்டிப்பட்டி, ஒந்தியம்புதூர், கோடாலவலசை, குப்பநத்தம், நடுப்பட்டி, பெருமாள் கோவிலுனூர், காமராஜ் நகர் என 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன.பாவக்கல் பஞ்சாயத்து மற்றும் அருகில் உள்ள மூன்றம்பட்டி, காட்டேரி பஞ்சாயத்தில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. கோழி, ஆடு, மாடு, எருமைகளை அதிக அளவில் விவசாயிகள் வளர்த்து வருகின்றனர்.பத்துக்கும் மேற்பட்ட பால் கொள்முதல் நிலையங்கள் உள்ளன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளை விவசாயிகள் வளர்த்து வருகின்றனர். கால் நடைகளுக்கு நோய் ஏற்பட்டால், 10 கி.மீ., தூரம் உள்ள காட்டேரி கால்நடை மருத்துவமனைக்கு செல்ல வேண்டும்.மழை காலங்களில் தென்பெண்ணை ஆற்றில் நீர் வரத்து அதிகமாவதால் விவசாயிகள் 25 கி.மீ., தூரம் சென்று வருகின்றனர். விவசாயிகளுக்கு வருமானம் தர கூடிய தொழிலாக உள்ளதால் பாவக்கல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஐயப்பன் கோவில் சீஸன் :வாழைத்தார் விலை இருமடங்கு உயர்வு**

கோபிசெட்டிபாளையம்ஐயப்பன் கோவில் சீஸனால், வாழைப்பழத்தின் தேவை அதிகரித்துள்ளதால் சென்ற ஆண்டை விட, நடப்பாண்டு வாழைப்பழத்தின் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது.கோபி சுற்று வட்டாரத்தில் கோபி, புளியம்பட்டி, குருமந்தூர், மூணாம்பள்ளி, ஆயிபாளையம், மோளபாளையம், அக்கரைகொடிவேரி, புஞ்சை

புளியம்பட்டி, பங்களாபுதூர் சுற்று வட்டாரத்தில், 25 ஆயிரம் ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.அறுவடை செய்யப்படும் வாழைத்தார் கோபி வேளாண்மை உற்பத்தியாளர் விற்பனை சங்கத்தில் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டில் வாழைத்தார் சீஸன் இல்லாத நேரத்தில் சராசரியாக, 15 ஆயிரம் வாழை தார் வரத்தானது. நடப்பாண்டு சீஸன் நேரத்திலும், 8,000 வாழைத்தார் மட்டுமே வரத்தாகிறது. ஐயப்பன் கோவில் சீஸன், மார்கழி என்பதாலும் வாழைப்பழம் தேவை அதிகரித்துள்ளதால், வாழைத்தாரின் விலை ஏறுமுகமாக உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.கதளி ஒரு கிலோ, 31 ரூபாய்க்கும், நேந்திரம், 23க்கும், ரஸ்தாளி ஒரு தார், 400 ரூபாய், தேன்வாழை, 425 ரூபாய், ரொபஸ்டா, 370 ரூபாய், மொந்தன், 250 ரூபாய், பூவன், 275 ரூபாய், பச்சைநாடன், 220 ரூபாய், செவ்வாழை, 450 ரூபாய்க்கு விற்பனையாகிறது.வாழை விவசாயிகள் கூறியதாவது: ஐயப்பன் கோவில் சீஸன் நேரத்தில் கேரளாவில் நேந்திரம் சிப்ஸ் விற்பனை அமோக இருக்கும். கேரளாவை சேர்ந்த வியாபாரிகள் ஏராளமானோர் விற்பனை சங்கத்தில் வாழைத்தார் வாங்கி செல்வர். கடந்த ஆண்டில் ஐயப்பன் கோவில் சீஸன் நேரத்தில், முல்லை பெரியாறு பிரச்னை தொடர்பாக கேரளா வியாபாரிகள் வராததால், நேந்திரம் விற்பனை சரிந்தது.நடப்பாண்டு நேந்திரம் வாழை விற்பனையும், வாழையின் தேவை அதிகரித்ததாலும், நடப்பாண்டு நேந்திரம், கதளியின் விலை இரு மடங்கானது.கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் கதளி ஒரு கிலோ, 15.60 ரூபாய், நேந்திரம், 16. 50 ரூபாய், ரஸ்தாளி ஒரு தார், 410 ரூபாய், தேன்வாழை, 280 ரூபாய், ரொபஸ்டா, 250 ரூபாய், மொந்தன், 220 ரூபாய், பூவன், 270 ரூபாய், பச்சைநாடன், 190 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.நடப்பாண்டு கதளி ஒரு கிலோ, 31 ரூபாய், நேந்திரம், 23 ரூபாய்க்கும் உயர்ந்துள்ளது. நடப்பாண்டு பருவமழை தவறியதால் வாழை உற்பத்தி, 50 சதவீதம் குறைந்ததால், வரத்தும் குறைந்தது. வாழை தேவை அதிகரித்துள்ளதால், வாழையின் விலை, மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்.

**அறுவடைக்கு தயாரான மக்காச்சோளம் : ஆட்பற்றாக்குறையால் காத்திருப்பு**

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் அடுத்த ஆசனூர் மற்றும் கடம்பூர் மலைப்பகுதியில் நடவு செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் மக்காச்சோளம், அறுவடைக்கு தயாராக உள்ள நிலையில், ஆட்கள் பற்றாக்குறையால்,விவசாயிகள் திண்டாடி வருகின்றனர்.சத்தியமங்கலம் அடுத்துள்ளது, ஆசனூர் மற்றும் கடம்பூர் மலைப்பகுதி. ஆசனூர் மற்றும் கடம்பூரை சுற்றிலும் உள்ள குக்கிராமங்களில், விவசாயத்தை நம்பியே மக்கள் உள்ளனர்.இங்குள்ள நிலங்கள் மானாவரியாக இருப்பதால், மழையை நம்பி மட்டுமே பயரிட முடியும். எனவே, ஆசனூர் மலைப்பகுதியில், ராகி, குச்சிக்கிழங்கு, மக்காச்சோளம் பயிரிடுவது வழக்கம். தற்போது, மக்காச்÷சாளத்துக்கு அதிக விலை கிடைப்பதால், மலைப்பகுதி கிராமத்தில், ஆயிரக்கணக்கான ஏக்கரில், ஆசனூர், கடம்பூர் மலைப்பகுதியில், மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது.இரண்டு மாதங்களுக்கு முன் புயல் காரணமாக, ஆசனூர் மற்றும் கடம்பூர் மலைப்பகுதியில் தொடர் மழை பெய்தததால், மக்காச்சோளத்தின் விளைச்சல் அமோகமாக இருந்தது. தற்போது அறுவடைக்கு தயார்நிலையில் மக்காச்சோளம் உள்ள நிலையில், ஆட்கள் பற்றாக்குறையால், அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.மலைப்பகுதியில் வசிக்கும் மக்கள், திருப்பூர், ஈரோடு, சத்தியமங்கலம், கோயமுத்தூர் உள்ளிட்ட பகுதியில் மில் பணி, கரும்பு வெட்டும் பணிக்கு சென்றதாலும், கர்நாடகா மாநிலத்துக்கு தங்கல் வேலைக்கு சென்றதாலும், ஆசனூர் மற்றும் கடம்பூர் மலைப்பகுதியில் மக்காச்சோள அறுவடைக்கு ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளதாக விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர்.

**அதிக கொழுப்பு சத்துள்ள பால் கொள்முதல் :**

கோபிசெட்டிபாளையம்ஈரோடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பால் சொசைட்டிகளில், எட்டு சதவீத கொழுப்பு சத்து இருந்தால் மட்டுமே, பால் கொள்முதல் செய்யப்படுவதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.ஈரோடு மாவட்டத்தில், 742 பால் கூட்டுறவு சொசைட்டிகள் மூலம், பால் கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் செய்யப்படும் பால், சித்தோடு, சத்தியமங்கலம், தாராபுரம் ஆகிய மூன்று இடங்களில் ÷சமித்து வைக்கப்படுகிறது.கூட்டுறவு சொசைட்டிகளில் வழங்கப்படும் பால், கொள்முதல் விலையை விட, தனியார் லிட்டருக்கு ஒன்று முதல், இரண்டு ரூபாய் வரை அதிகமாக

கொடுப்பதால், சில விவசாயிகள், தனியாரிடம் பால் விற்பனை செய்கின்றனர். சென்ற ஆண்டில் பால் கொள்முதல் விலை பசும்பால், 18 ரூபாயில் இருந்து, 20 ரூபாய், எருமைப்பால், 26 ரூபாயில் இருந்து, 28 ரூபாயாக உயர்த்தப்பட்டது.இதனால், கூட்டுறவு சொசைட்டிகளுக்கு பால் வரத்து அதிகரிக்க துவங்கியது. கூட்டுறவு சொசைட்டிகளில் கொழுப்பு சதவீதத்தை பொறுத்து பால் கொள்முதல் விலை வழங்கப்படுகிறது. ""பால் கொழுப்பு சதவீதம், எட்டு சதவீதம் இருந்ததால் மட்டுமே கொள்முதல் செய்யப்படும்," என சொசைட்டிகளுக்கு ஆவின் நிர்வாகம் வாய்மொழி உத்தரவிட்டுள்ளது.சில விவசாயிகள் கொண்டு வரும் பாலின் கொழுப்பு சதவீதம், 7.5 சதவீதம் இருப்பதால் திருப்பி அனுப்பப்படுகிறது. மாடு கறக்கும் பாலின் கொழுப்பு சதவீதமே இவ்வாறு இருக்கும் போது, எட்டு சதவீத கொழுப்பு பாலை எவ்வாறு கொடுக்க முடியுமென, விவசாயிகள் கேள்வி எழுப்பி உள்ளனர்.பால் சொசைட்டிகளில், பல ஆண்டுகளாக பால் ஊற்றும் சங்க உறுப்பினர்களுக்கு, வங்கிகள் கடன் வழங்க மறுக்கிறது. கடன் வாங்க முடியாமல் உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.சங்க உறுப்பினர்கள் சிலர் கூறியதாவது:தமிழகத்தில் உள்ள பால் கூட்டுறவு சொசைட்டிகளில் கொழுப்பு சதவீதத்தை பொருத்தே பால் விலை தருகின்றனர். கொழுப்பு சதவீதத்தை பொறுத்து பாலின் விலை லிட்டருக்கு, இரண்டு முதல், நான்கு ரூபாய் வரை குறைவாக வழங்கப்படும். சொசைட்டியில் எட்டு சதவீத கொழுப்பு பால் மட்டுமே கொள்முதல் செய்யப்படும், என சொசைட்டி தரப்பில் தெரிவிக்கின்றனர். மாடுகள் கறக்கும் பாலின் தன்மையே, அவ்வாறு இருக்கும் போது, எட்டு சதவீத கொழுப்பு சத்து கொண்ட பாலுக்கு எங்கு செல்வது.பால் சொசைட்டிகளில் வழங்கப்படும் பால் விலையை விட, தனியார் கூடுதல் விலை கொடுக்கின்றனர். தனியாரிடம் ஏழு சதவீத கொழுப்பு சதவீதம் இருந்தால், கூட வாங்கி கொள்கின்றனர்.ஈரோடு மாவட்டத்தில் உள்ள பால் கூட்டுறவு சங்க, வரவு, செலவு கணக்கு, மத்திய கூட்டுறவு வங்கியில் வைக்கப்பட்டுள்ளது. மானியம் பெறும் வகையில், மற்ற வங்கிகளில் கடன் கேட்டால், மத்திய கூட்டுறவு வங்கியில் வரவு,செலவு கணக்கு வைத்துள்ளதால், கடன் மறுக்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்க, கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்

சென்னிமலை: மத்திய அரசின் வாசனை மற்றும் பாக்கு பயிர் மேம்பாட்டு நிறுவனமும், மைராடா வேளாண்மை அறிவியல் நிலையமும் இணைந்து சென்னிமலையில் விவசாயிகள் விழிப்புணர்வு முகாமினை நடத்தியது.சென்னிமலை வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் குணசேகரன் தலைமை வகித்தார். மைராடா வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தோட்டக்கலை தொழிற்நுட்ப அதிகாரி பச்சியப்பன் அனைவரையும் வரவேற்று பேசினார். சென்னிமலை வேளாண்மை உதவி இயக்குனர் வாசுதேவன் வாழ்த்திப் பேசினார். கோவை வாசனை பயிர் மேம்பாட்டு இயக்கத்தின் முதன்மை கள அலுவலர் கனகதீலிப்பன், ÷வளாண்மை பல்கலையின் வாசனை பயிர் துறை தலைவர் பேராசிரியர் பரமகுரு, பூச்சியியல் துறை பேராசிரியர் அசோகன், வாசனை பயிர் துறை உதவி பேராசிரியர் சரவணகுமார் ஆகியோர் கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு வாசனை பயிர் சாகுபடி குறித்த விபரங்களையும், அதற்கு அரசு தரும் உதவிகளையும் பற்றி எடுத்து கூறினர்.மைராடா நிறுவனத்தின் மனையியல் தொழிற்நுட்ப அலுவலர் சிவா நன்றி கூறினார். மைராடா வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப அலுவலர் சேகர், ராஜேஸ்கண்ணா ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர். கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும், இயற்கை வழி விவசாயம், மண்புழு உரம் தயாரித்தல், மஞ்சள் சாகுபடி விவசாயத்துக்கு தேவையான தொழிற்நுட்ப தொகுப்பு ஆகியவை அடங்கிய கையேடுகள் மற்றும் மண்புழுஉரம் காய்கறி பயிர் சாகுபடிக்கு தேவையான நுண்ணூட்ட கலவை ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டது.

## கரும்பு விவசாயம் கடும் பாதிப்பு அரசு நடவடிக்கை எடுத்தால் தப்பும்

கூடலூர் : "கூடலூர் பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள கரும்பு விவசாயத்தை பாதுகாக்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கூடலூர் பகுதியில் 10 ஆண்டுகளாக விவசாயிகள் பலரும் கரும்பு விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர். இப்பகுதியில் விளைவிக்கப்படும் கரும்பை, அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் கொள்முதல் செய்யவில்லை. இதனால், விவசாயிகள் கரும்பை, வெல்லமாக

மாற்றி கடைகளுக்கு விற்பனை செய்து வந்தனர். காலபோக்கில் இதில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக, பெரும்பாலான கரும்பு விவசாயிகள், வேறு விவசாயத்துக்கு மாறி விட்டனர். தற்போது, புத்தூர் வயல் பகுதியில் ஒரு சிலர் மட்டுமே கரும்பு விவசாயத்தில் தொடர்ந்து ஈடுப்பட்டுள்ளனர். இவர்களும், சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். இதனால், கர்நாடக மாநிலம் குண்டல்பேட் பகுதியின் ஊழியர்களை வரவழைத்து கரும்பு வெல்லமாக மாற்றி விற்பனை செய்து வருகின்றனர். ஆனால், இதற்கு போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து கரும்பு விவசாய அணில் கூறுகையில்,""நாங்கள் பரம்பரையாக கரும்பு விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம். முன்பு எதிர்பார்த்த லாபம் கிடைத்தது. தற்போது மழை குறைவு, இடுபொருள்களின் விலையேற்றம், பணியாளர்கள் சம்பள உயர்வு போன்ற காரணங்களால் உற்பத்தி செலவு வெகுவாக அதிகரித்துள்ளது.

இதனால், கரும்பு விவசாயத்தை விட்டு, வேறு விவசாயத்துக்கு மாற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது," என்றார். எனவே, அரசு கரும்பு விவசாயத்தை பாதுகாக்கவும், விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு அளிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தற்கொலை விவசாயி குடும்பத்துக்குரூ .10 லட்சம் : மா.கம்யூ., கோரிக்கை**

புதுக்கோட்டை: "சம்பா பயிர்கள் கருகியதால், தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் குடும்பத்துக்கு, அரசு தலா, 10 லட்ச ரூபாய் நிவாரண உதவி வழங்கவேண்டும்' என, மா.கம்யூ., கோரியுள்ளது.புதுக்கோட்டையில் இதுகுறித்து அக்கட்சியின் எம்.எல்.ஏ., லாசர், நிருபர்களிடம் கூறியதாவது:வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டதாலும், காவிரியில் தண்ணீர் விட கர்நாடகா மறுப்பதாலும், தமிழகம் முழுவதும் கடும் வறட்சி நிலவி வருகிறது. பருவமழை மற்றும் காவிரி தண்ணீரை எதிர்பார்த்து, சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிர்கள் கருகி வருகிறது.பயிர்கள் கருகி போனதால் விரக்தியடைந்துள்ள விவசாயிகள் தற்கொலை செய்து வருகின்றனர். டெல்டா பகுதிகளில் மட்டும் இதுவரை, 10 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர்.விவசாயிகளை இழந்து பரிதவித்து வரும், அவர்களது குடும்பத்துக்கு, 10 லட்சம் ரூபாய் வீதம் நிவாரண உதவி வழங்கவேண்டும்.குடும்பத்தில் ஒருவருக்கு

அரசுத்துறைகளில் வேலைவாய்ப்பு வழங்கவேண்டும். சம்பா நெற்பயிர்கள் கருகியதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு, 13 ஆயிரத்து, 500 வீதம் இழப்பீடு வழங்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இதை, 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கவேண்டும்.கருகும் நிலையில் உள்ள சம்பா பயிர்களை காப்பாற்றும் விதமாக, நீர்நிலைகளில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து பாசன வசதி செய்ய, தமிழக அரசு போர்க்கால நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன்மூலம் டெல்டா பகுதிகளில், இரண்டு லட்சத்து, 23 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா பயிர்களை காப்பாற்ற முடியும்.இதை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், வரும் ஜனவரி, 7ம் தேதி டெல்டா மாவட்டங்களில் உள்ள ஆர்.டி.ஓ., அலுவலகங்கள் முன்பு முற்றுகை போராட்டம் நடைபெறும்.இவ்வாறு எம்.எல்.ஏ., கூறினார்.பேட்டியின் போது மாவட்டச் செயலாளர் சின்னத்துரை உடனிருந்தார்.

**திடீர் பனிமழை தூறலால் "சம்பா ' பிழைக்க வாய்ப்பு ?**

திருத்துறைப்பூண்டி: பரவலாக பெய்த பனிமழை தூறலால், திருவாரூர் மாவட்டத்தில் சம்பா பயிர்கள் பிழைக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.காவிரி டெல்டா மாவட்டங்களில் தாமதமாக திறக்கப்பட்ட மேட்டூர் அணை தண்ணீர், போதுமான அளவுக்கு வந்து சேராததால், ஒருபோக சம்பா சாகுபடி நடந்தது. தற்போது, தண்ணீரின்றி வயல்கள் வெடித்து, பயிர்கள் காய்ந்து கருகி வருகின்றன. இதனால், விவசாயிகள் கடும் சோகத்துக்கு ஆளாகியுள்ளனர்.இந்நிலையில் திருவாரூர், நாகை மாவட்டத்தில் கடற்கரையோர பகுதிகளில் கடந்த, மூன்று நாட்களாக மப்பும், மந்தாரமுமாக இருந்த வானம், நேற்றுக்காலை முதல் பனித்தூறலாக மழை பெய்தது. செப்., முதல் வாரத்தில் நேரடியாக விதைக்கப்பட்ட நெற்பயிர்களில், திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி, ஆதிரெங்கம், கட்டிமேடு, ஆலத்தம்பாடி உள்பட பல இடங்களில் கதிர்கள் வெளிவர துவங்கியுள்ளன.இந்நிலையில் பனி மழைத்தூறல் மேலும் இரண்டு, மூன்று நாட்களுக்கு தொடர்ந்தால், ஓரளவு கதிர் வந்த நிலையிலுள்ள ஆயிரம் ஏக்கர் சம்பா நெற்பயிர் உயிர்பிடித்து, அறுவடை பருவத்தை எட்டும் நிலை ஏற்படும் எனும் எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.ஏமாற்றிய மேகமூட்டம்: தஞ்சையில்

வயல்வெளிகளில் தண்ணீரின்றி சம்பா பயிர்கள் முழுவதும் காய்ந்து, கருக துவங்கியுள்ளது. இந்நிலையில் நேற்று மதியம், 12 மணி முதல், மாலை வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு, வெய்யிலின் தாக்கம் முற்றிலும் குறைந்திருந்தது. இதனால், மழை பெய்யுமா? என காத்திருந்த விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.

**புது கால்நடை மருத்துவகிளை நிலையம் திறப்பு**

வேதாரண்யம்: ஆதனூர் கோவில்தாழ்வு கிராமத்தில் கால்நடைத்துறை சார்பில், புதிய கால்நடை மருத்துவ கிளை நிலையம் திறக்கப்பட்டது.புதிய கால்நடை மருத்துவ கிளை திறப்பு விழாவுக்கு நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி தலைமை வகித்தார். எம்.எல்.ஏ., காமராஜ், நாகை ஆர்.டி.ஓ., மணிகண்டன், பஞ்சாயத்து யூனியன் தலைவர் சுசீலாதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை துறை மண்டல இணை இயக்குனர் பிரித்திவிராஜ் வரவேற்றார்.தமிழக முதல்வரின் உத்தரவுப்படி, ஆதனூர் கோவில்தாழ்வு கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவ கிளை நிலையத்தை, மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் திறந்து வைத்தார். இங்கு நடந்த இலவச கால்நடை மருத்துவ முகாமில், கால்நடைகளுக்கு குடற்புழு மருந்து வழங்கினார். சிறந்த கால்நடை பராமரிப்புக்காக விவசாயிகளுக்கு அமைச்சர் பரிசுகளை வழங்கினார்.மாவட்ட அ.தி.மு.க., பொருளாளர் பாட்ஷா, ஒன்றிய செயலாளர் சிவானந்தம், துணை செயலாளர் சரவணன், மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலர் சண்முகராசு, யூனியன் துணை தலைவர் ஜெயபால், வக்கீல் நமச்சிவாயம், பஞ்சாயத்து தலைவர் மனோகரன் உட்டபட பலர் பங்கேற்றனர். கால்நடைத்துறை உதவி இயக்குனர் ரமேஷ் நன்றி கூறினார்.

**மழையில்லை : புளி மகசூல் பாதிப்பு நத்தம் குத்தகைதாரர்கள் ஏமாற்றம்**

நத்தம்:நத்தம் மற்றும் சாணார்பட்டி பகுதிகளில் இந்தாண்டு போதிய மழைபெய் யாததால், புளி மகசூல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நத்தம், சாணார்பட்டி பகுதிகளில் மா, புளி, தென்னை சாகுபடி அதிகளவில் நடக்கிறது. 10 ஆயிரம் ஏக்கரில் புளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு புளி விளைச்சலுக்கேற்ற

மிததட்பவெப்பம் நிலவுவதால், ஆண்டுந்தோறும் தை முதல் சீசன் துவங்கி ஆண்டும் முழுவதும் நடக்கும்.

இப்பகுதியில் நல்ல மண் வகைகள் காணப்படுவதால், புளி சுவையாக காணப்படும். இதனால், மாநிலளவில் மட்டுமல்ல வெளி மாநிலங்களில் கூட நத்தம் புளி என நிலையான மார்க்கெட் உள்ளது. இந்தாண்டு புளி சாகுபடிக்கேற்ற மழையளவு குறைவால் மரங்களில் பூக்கள் 30 சதம் மட்டுமே காணப்படுகிறது.

இதனால், மகசூல் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்தாண்டில் இப்பகுதி வியாபாரிகள் குளிர்பதனக் கிடங்குகளில் ஏராளமான புளியை இருப்பு வைத்துள்ளனர்.

ஆந்திரா, கர்நாடகம், உத்ராஞ்சல் போன்ற வெளி மாநிலங்களில் இந்தாண்டு புளி விளைச்சல் அதிகரித்துள்ளது. இத்தகைய காரணங்களால் நத்தம் மற்றும் சாணார்பட்டி பகுதிகளில் இந்தாண்டு புளி விளைச்சல் பாதித்தாலும், விலையில் எந்த மாற்றம் இருக்கப்போவதில்லை.

இதனால், இந்தாண்டில் புதிதாக மரம் குத்தகைப்பிடித்தவர்கள் மத்தியில் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

**வறண்டது வைகை நெல் சாகுபடிக்கு சிக்கல் குடிநீர் திட்டக்கிணறுகளும் தப்பவில்லை**

நிலக்கோட்டை:மழை இல்லாமல் வைகை ஆறு வறண்டதால், ஆற்றுப்படுகை விவசாயிகள் இரு போக நெல் சாகுபடி செய்யவில்லை. வைகை ஆற்றில் உள்ள குடிநீர் திட்ட கிணறுகள் வறண்டு வருவதால் கிராமங்களில் குடிநீர் பஞ்சம் ஏற்படும் அபாயம் உள்ளது.

திண்டுக்கல், நிலக்கோட்டை தாலுகாவில் ராமநாயக்கன்பட்டி, கண்ணாபட்டி, கொபட்டி, சிவஞானபுரம், குல்லிசெட்டிபட்டி, சித்தர்கள்நத்தம், விளாம்பட்டி, அணைப்பட்டி, ராமராஜபுரம், மட்டப்பாறை பகுதிகளில் வைகை ஆறு,

பெரியாறு கால்வாய் பாசனம் மூலம் இருபோக நெல் சாகுபடி செய்து வருகின்றனர். முதல் போகம் ஜூனில் துவங்கி அக்டோபரில் முடியும்.

இரண்டாம் போகம் அக்டோபர் மாத இறுதியில் துவங்கி ஜனவரி வரை நீடிக்கும்.

தென்மேற்கு பருவ மழை பொய்த்ததால், முதல் போக சாகுபடி செய்யவில்லை. இரண்டாம் போகத்தின் போது பத்து நாட்கள் தண்ணீ திறந்து விட்டனர். இதை நம்பி விலைக்கு விதை நெல் வாங்கி நாற்றாங்கால் விதைத்தனர்.

வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால், வைகை அணைக்கு நீர் வரத்து இல்லை. அணையிலிருந்தும் நீர் திறக்கப்படவில்லை. மழையில்லாததால் விதைத்த நாற்றாங்காலை அப்படியே விட்டு விட்டனர். நாற்றாங்காலில் ஆடு,மாடுகள் மேய்கின்றன.

வைகை ஆற்றுப் பாசனத்தை நம்பியிருக்கும் விளாம்பட்டி விவசாயி ரவிச்சந்திரன் கூறுகையில்,""வைகை அணையை நம்பி 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் கள்ளந்திரி வரை உள்ளது. நிலக்கோட்டை தாலுகாவில் மட்டும் 2 ஆயிரம் ஏக்கரில் இரு போக நெல் சாகுபடி நடக்கும். மழை இல்லாததால் இரு போகத்தையும் இழந்துவிட்டோம். ஒவ்வொரு விவசாயியும், நாற்றாங்கால் விதைக்க 20 ஆயிரம் ரூபாய் செலவிட்டுள்ளோம். காவிரி டெல்டா பகுதியில் வறட்சி நிவாரணம் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். வைகை பாசனத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்," என்றார்.

வைகை ஆறு வறண்டதால், ஆற்றங்கரையோரம் உள்ள கிணறுகளும் வற்றி விட்டன. வைகையை நம்பி உள்ள நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, உசிலம்பட்டி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியங்கள், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, சின்னாளபட்டி பேரூராட்சிளை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட குடிநீர் திட்ட கிணறுகளும் வற்றி வருகின்றன. இதே நிலை நீடித்தால் கிராமங்களில் குடிநீர் பஞ்சம் ஏற்படும் என ஊராட்சி தலைவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## வேலை தேடி குடும்பத்துடன் வெளியூர் செல்லும் விவசாயிகள்

தேவதானப்பட்டி:தேனி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால், விவசாய கூலித் தொழிலாளர்கள், குடும்பம் குடும்பமாக வேலை தேடி, திருப்பூர், கோவை, சென்னை உள்ளிட்ட ஊர்களுக்கு செல்லத் துவங்கி உள்ளனர்.

முல்லைப்பெரியாறு, வைகை அணை, மஞ்சளாறு, சோத்துப்பாறை போன்ற அணைகளை

நம்பி, 200 கண்மாய்கள், சிறுகுளங்கள் இருப்பதால், தேனி மாவட்டத்தில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. நடப்பு ஆண்டில் பருவமழை பொய்த்து விட்டதால், பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், முதல் போக நெல் சாகுபடி குறைந்து விட்டது.
சின்னமனூர்,பெரியகுளம், தேனி, போடி பகுதிகளில் கொடிக்கால் விவசாயிகள் அகத்தி விதை, விதைப்பு பணி முடித்து, 4 மாதங்கள் ஆகிவிட்ட நிலையில், கிணறுகளில் நீர் இல்லாததால், வெற்றிலைக் கொடி நடவுப்பணி செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.
மேலும், 80 சதவீத விவசாயிகள், மானாவாரிப்பயிர்களை பயிரிட வில்லை.
இதனால், தேனி மாவட்ட விவசாய கூலித் தொழிலாளர்கள் வேலையின்றி, வறுமையில் வாடும் நிலை உள்ளது. எனவே அவர்கள் வேலை தேடி திருப்பூர், கோவை, சென்னை, கேரளா இடுக்கி உள்ளிட்ட வெளியூர்களுக்கு செல்ல துவங்கி உள்ளனர்.

**வளர்ந்த பயிரைத்தான் காப்பாத்த முடியல இன்சூரன்ஸ்க்கும் வழியில்லையே காத்திருக்கும் விவசாயிகள் விரக்தி**

காரைக்குடி:மின்தடையால்,ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் மட்டுமே, தாலுகா அலுவலகத்தில் சிட்டா நகல் வழங்குவதால், வாரக்கணக்கில் விவசாயிகள் அலைந்து வருகின்றனர்.
தண்ணீர் தட்டுப்பாடு, மின்வெட்டு உள்ளிட்ட பிரச்னைகளால், விளைச்சல் இன்றி நெற்பயிர்கள் காய்ந்து வருகின்றன. நகை, சொத்துக்களை அடகு வைத்த விவசாயிகள், அவற்றை மீட்க முடியுமா என்ற விரக்தியில் உள்ளனர். இந்நிலையில், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடு செய்ய அரசு அறிவுறுத்தியுள்ளது.
விவசாயிகள் காப்பீடு செய்ய, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் கணக்கு, நிலத்தின் சிட்டா நகல், அடங்கல் சமர்ப்பிக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.
மின்தடையால், காரைக்குடி தாலுகா அலுவலகத்தில், கடந்த ஒரு வாரமாக, ஜெயங்கொண்டம், கீழ பூங்குடி, கல்லல், பொய்லூர், வெற்றியூர், கோமளபட்டி, சிறுகப்பட்டி, பெரிய கொட்ட குடி, சாக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து வந்த, ஆண், பெண் விவசாயிகள் நாள் கணக்கில், காத்து கிடக்கின்றனர். பெரும்பாலான மாவட்டங்களில் இதே நிலை தான் காணப்படுகிறது.

அழகன்ஆறுமுகம், கழனிவாசல்: சிட்டா நகல் பெற, எட்டு மணிநேரம் கால்கடுக்க நிற்கிறேன். கரண்ட் வரட்டும் என்கின்றனர்.பின்னர் கரண்ட் இல்லை, என கூறி மாலையில் திருப்பி அனுப்பினர்.

இன்று வந்தால், மதியம் 2 முதல் 4 மணி வரை மட்டுமே கரண்ட், அப்பொழுது தான் தர முடியும் என்கின்றனர். பயிரை விளைவிக்கும் கஷ்டத்தை விட, பத்து ஒன்னுக்கு அதிகம் கஷ்டப்படவேண்டியது உள்ளது.

காந்திமதி,வெற்றியூர்: வரிசையை விடக்கூடாது என்பதால், சாப்பிட கூட செல்ல முடியவில்லை. மூன்று நாளாக அலைகிறேன்.

பகலில் ஒரு மணிநேரம் மட்டுமே நகல் கொடுக்கின்றனர். காலை 7 மணிக்கு வந்தால், மாலை ஆறு மணிவரை நின்றும் பயன் இல்லை. எனவே, தாலுகா அலுவலகத்தில் ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்தி தரவேண்டும், என்றார்.

## ஆடு வளர்ப்பு பயிற்சி

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை கோவிலாங்குளம் வேளாண்மை அளிவியல் நிலையத்தில், விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பு முறை குறித்து பயிற்சி நடந்தது. அறிவியல் மைய தலைவர் பால்பாண்டி தலைமை வகித்தார். ராஜபாளையம் தமிழ்நாடு கால்நடை பல்கலை கழக ஆராய்ச்சி மைய தலைவர் தங்கத்துரை, குளிர் மற்றும் கோடை காலங்களில் ஆடுகளை பராமரிப்பது பற்றியும், ஆடுகளின் வகைகள், தேர்ந்துதெடுக்கும் முறை, குடில் அமைக்கும் முறை, உணவு போன்றவை குறித்து விளக்கினார். ஏற்பாடுகளை பேராசிரியர் ராஜேந்திரன், ஜெகதீஸ்வரி, முத்துராமு, உதவியாளர்கள் கவிதா, ரம்யா செய்திருந்தனர். 100 க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கிணற்று நீர் பாசனம் மூலம் சம்பா சாகுபடி :அறுவடைக்கான இயந்திரங்களை வழங்க எதிர்பார்ப்பு

திருவள்ளூர் மாவட்டத்தில், கிணற்று நீர் பாசனம் மூலம், சம்பா சாகுபடி திருப்திகரமாக நடந்து உள்ளது. அடுத்த கட்டமாக, அறுவடைக்கு தேவையான இயந்திரங்களை அரசு வழங்க வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில், சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல், சோழவரம், பூண்டி

ஏரிகள் மட்டுமின்றி, ஆறு, குளம் உள்ளிட்ட நீர் ஆதாரங்கள் அதிகளவில் உள்ளன. இருப்பினும், கிணற்று நீர் பாசனம் மூலம், இம்மாவட்டத்தில் அதிக அளவில், விவசாயம் நடந்து வருகிறது.

பாசன கிணறுகள்

மாவட்டத்தில், ஏறத்தாழ 25 ஆயிரம் பாசன கிணறுகள் உள்ளன. பருவ மழை போதிய அளவு பெய்யாவிட்டாலும், அதிக வறட்சியால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்தால், மட்டுமே, இம்மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்படும். மற்றபடி, விவசாயம் இங்கு பெரிதாக பாதிக்கப்படுவது இல்லை.

பெருகிவரும் பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகள், குடியிருப்புகள் காரணமாக, இம்மாவட்டத்தில், விவசாய நிலங்களின் பரப்பளவு ஆண்டுதோறும் குறைந்து வருகிறது. இருப்பினும், விவசாய தொழிலை பலர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழை ஏமாற்றியதால், டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ள நிலையில், கிணற்று பாசனம் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில், சம்பா சாகுபடி திருப்திகரமாக நடந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

உற்சாகம்

கடந்தாண்டு, 95,575 ஏக்கரில் மட்டுமே, சம்பா சாகுபடி நடந்தது. ஆனால், இந்தாண்டு, 1.6 லட்சம் ஏக்கர் பரப்பளவில், சாகுபடி நடந்து உள்ளது. இதில், வேளாண் துறையினர் முயற்சியால், திருந்திய நெல் சாகுபடி முறையில், 69,384 ஏக்கரில் சாகுபடி நடந்து உள்ளது.

இதன் மூலம் விவசாயிகளுக்கு தண்ணீர் தேவையும், உற்பத்தி காலமும் குறைந்து உள்ளது. சம்பா சாகுபடி களை கட்டி உள்ள காரணத்தால், இம்மாவட்ட விவசாயிகள் மிகுந்த உற்சாகம் அடைந்து உள்ளனர்.

ஆந்திர மாநில எல்லையை ஒட்டியுள்ள, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு, திருத்தணி உள்ளிட்ட பகுதிகளில், பயிர்கள் அறுவடைக்கு தயாராகி உள்ளன. ஓரிரு நாட்களில் அறுவடை துவங்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

பொன்னேரி, கும்மிடிபூண்டி, திருவள்ளூர் உள்ளிட்ட பகுதிகளில், இம்மாத இறுதி அல்லது

தை மாத துவக்கத்தில், அறுவடை நடக்கும் என, தெரிகிறது. சாகுபடி திருப்திகரமாக இருந்தாலும், அறுவடைக்கு கூலியாட்களை தேடுவது இவர்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தி உள்ளது.

கட்டட பணிக்கு...

இம்மாவட்ட விவசாய கூலியாட்கள் பலர், சென்னையில் கட்டட பணி உள்ளிட்ட பல்வேறு வேலைகளுக்கு சென்று வருகின்றனர். இதேபோல, 100 நாள் வேலை திட்டத்துக்கும், பலர் சென்று வருவதே இதற்கு காரணம்.

இதனால், இயந்திரத்தை பயன்படுத்தி, அறுவடை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. ஆந்திர மாநிலத்தில், அறுவடை துவங்கி உள்ளதால், தனியார் அறுவடை இயந்திரங்கள், அங்கு எடுத்து செல்லப்பட்டு உள்ளன.

இப்பொழுது ஆந்திராவில் இருந்து அறுவடை இயந்திரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக திரும்பி வர தொடங்கியுள்ளன.

சலுகை கிடைக்குமா?

இதுகுறித்து, திருவள்ளூர் மாவட்ட விவசாயி ஒருவர் கூறியதாவது:

அரசு வழங்கிய விதை மானியத்தை மட்டுமே பயன்படுத்தி, நாங்கள் விவசாயம் செய்து உள்ளோம். கிணற்றில் போதுமான அளவு தண்ணீர் இருந்தாலும், மின்வெட்டை சமாளித்து, இரவு, பகல் தூங்காமல், பாசனம் செய்து பயிர்களை காப்பாற்றி உள்ளோம். டெல்டா மாவட்டங்களை போன்று, சமுதாய நாற்று, உரம், டீசல் பம்ப் மோட்டார் மானியம், பயிர் காப்பீடு போன்ற எந்த சலுகையும் எங்களுக்கு கிடைக்கவில்லை. எனவே, அறுவடைக்கான இயந்திரத்தையாவது இலவசமாக பயன்படுத்தி கொள்ள, அரசு அனுமதி வழங்க வேண்டும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் நெல் உற்பத்தி திருப்திகரமாக இருப்பதால், சென்னையில் அரிசி விலை கட்டுக்குள் இருக்க வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கரும்பு வெட்ட "ஆர்டர் 'கிடைக்காமல் தீ வைப்பு

திருவண்ணாமலை: ஆரணி அருகே கரும்பு பயிருக்கு ஆலை நிர்வாகம் வெட்டு ஆர்டர் கொடுக்காததால், விரக்தியடைந்த விவசாயிகள் கரும்புக்கு தீ வைத்து கொளுத்தி

வருகின்றனர்.

ஆரணி தாலுகாவில், எட்டு ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் கரும்பு பயிர் நடவு செய்துள்ளனர், இதில், ஆம்பூர், கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குட்பட்ட பகுதிகளான சேவூர், ராட்டிணமங்கலம், குன்னத்தூர், அக்ராபாளையம் உள்ளிட்ட பல கிராமங்களில் உள்ள, இரண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கரும்பு பயிரிட்டு, வெட்ட பதிவு செய்துள்ளனர்.கரும்பு, 12 மாத பயிராகும், ஆனால், 15மாதங்களாகியும் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகத்திடம் இருந்த விவசாயிகளுக்கு வெட்டு ஆர்டர் கிடைக்கவில்லை, பெயரளவுக்கு ஒரு சிலருக்கு ஆர்டர்வந்துள்ளது. அவர்களுக்கும், கரும்புகளை வெட்டி ஏற்றி செல்ல லாரிகள் அனுப்பவில்லை,பருவம் கடந்த நிலையில் கரும்பில் பூ பூத்து விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். இந்நிலையில், சேவூர் விவசாயிகள் தாங்கள் பயிர் செய்த கரும்புகளை நேற்று முன்தினம் 25ஆம் தேதி தீயிட்டு கொளுத்தினர், மேலும் இதே நிலை நீடித்தால் அப்பகுதியில் உள்ள கரும்புகள் முழுவதும் தீயிட்டு கொளுத்தும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

## கள்ளக்குறிச்சி பருத்தி வார சந்தையில் ரூ.11.35 லட்சத்திற்கு பஞ்சு கொள்முதல்

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பருத்தி வார சந்தையில் மூன்று வாரங்களில் மொத்தம் 11 லட்சத்து 35,000 ரூபாய் பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பருத்தி அறுவடை துவங்கியதையடுத்து கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி வார சந்தை துவக்கப்பட்டது. மூன்றாவது வாரமாக நேற்று நடந்த வார சந்தைக்கு 41 விவசாயிகள் 415 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

அதிகபட்சம் ஒரு குவிண்டால் 4,281 ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 4,119க்கும் விலை போனது. நேற்று 6 லட்சத்து 19,000 ரூபாய்க்கு பஞ்சு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது.

பருத்தி சந்தை துவங்கி மூன்று வாரங்களில் 11 லட்சத்து 35,000 ரூபாய்க்கு விவசாயிகளிடம் பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் கொண்டு வரும் பஞ்சுக்கு திருப்திகரமான விலை இல்லையெனில் அவைகளை பாது காக்கும் குடோன் வசதி உள்ளதால் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் வியா பாரிகள் வருகின்றனர். இதனால் ஆண்டுதோறும் கோடி கணக்கான ரூபாய்க்கு இங்கு வர்த்தகம் நடப்பதாக தனி அலுவலர் தெரிவித்தனர்.

**ஏமப்பே ர் விவசாயிகளுக்கு விதை கிராம திட்ட பயிற்சி**

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி அடுத்த ஏமப்பேர் கிராமத்தில் விதை கிராம திட்டம் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்

பட்டது.

விழுப்புரம் வேளாண் இணை இயக்குனர் சேகர் தலைமை தாங்கினார். தரமான விதைகள் உற்பத்தி செய்வது, அதிக முளைப்புத்திறன் கொண்ட விதைகள் விவசாயிகளுக்கு கிடைப்பதற்கான வழிமுறைகள் குறித்து அவர் விளக்கினார்.

கள்ளக்குறிச்சி வேளாண் உதவி இயக்குனர் தர்மலிங்கம், விதைச் சான்று அலுவலர்கள் சீனுவாசன், அன்பழகன், அலுவலர்கள் பொன்னுராசன், தேவி, விரிவாக்க அலுவலர் கோபால், உதவி அலுவலர் தவமணி, ரமேஷ்குமார், ராஜா, மொட்டையாப்பிள்ளை ஆகியோர் பயிற்சி அளித்

தனர்.

**விவசாயிகள் ஆர்வம்கணிசமான லாபம் ஈட்டி தரும் அவரை**

பள்ளிபாளையம்: குறுகிய காலத்தில் கணிசமான லாபம் ஈட்டித் தரும் அவரை கொடியை, பள்ளிபாளையம் சுற்றுவட்டார கிராம விவசாயிகள், ஆர்வமுடன் சாகுபடி செய்யத் துவங்கியுள்ளனர்.பள்ளிபாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில், விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, நெல், கரும்பு, வாழை போன்றவை முக்கிய பயிர்களாகும். தற்போது, குறுகிய கால பயிர்களான நடவு செய்வதில், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர்.குறிப்பாக, பள்ளிபாளையம் சுற்றுவட்டாரத்தில், பெரும்பாலான விவசாயிகள், அவரை சாகுபடி செய்துள்ளனர். மூன்று மாத காலத்தில் அறுவடை செய்வதுடன், குறைந்த செலவில்,

நிறைந்த லாபம் என்பதால், அவரை சாகுபடி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர்.விவசாயிகள் சிலர் கூறியதாவது:நீண்ட கால பயிர் சாகுபடி செய்வதைவிட, குறுகிய காலத்தில் பலன் தரும் காய்கறி செடிகளை நடவு செய்வதன் மூலம் கணிசமான லாபம் பார்க்க இயலும். தற்போது, அவரை சீஸன் என்பதால், பரவலாக அவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.முறையான பராமரிப்பு இருந்தால், ஏக்கருக்கு, 500 முதல், 700 கிலோ வரை அவரை மகசூல் எடுக்க இயலும். தற்போது, அவரைக்கு நல்ல கிடைத்து வருகிறது.இவ்வாறு அவர்கள் கூறினர்

## அட்மா திட்டத்தின் கீழ்அறுவடை பயிற்சி முகாம்

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை யூனியன், ஒண்டிக்கடை கிராமத்தில், அட்மா திட்டத்தின் கீழ், முட்டைகோஸ் பண்ணைப்பள்ளியில் அறுவடை பயிற்சி முகாம் நடந்தது.

நாமக்கல் வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன் தலைமை வகித்தார்.

நாமகிரிப்பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் விஜயகுமார் வரவேற்றார். அட்மா திட்டத் தலைவர் பிரசன்னன், வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) உமா மகேஸ்வரி, வேளாண் உதவி இயக்குனர் அசோகன் ஆகியோர் விளக்கி பேசினர்.பயிற்சியில், குழித்தட்டில் நாற்றுவிடுதல், உரமேலாண், ஒருங்கிணைந்த களை நிர்வாகம், சொட்டு நீர் அமைத்தல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம், விற்பனை செய்தல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.மேலும், அறுவடை செய்வது குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. ஒரு செடியில், ஒரு கிலோ, 70 கிராம் என்ற எடை அளவில் அறுவடை செய்யப்பட்டது. பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு, இடு பொருட்களாக மம்முட்டி, கதிர் அரிவாள், இரண்டு பிளாஸ்டிக் தட்டுகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டது.தோடக்கலைதுணை அலுவலர் ராமசாமி, உதவி தோட்டக்கலை அலுவலர்கள் முத்துராமன், சக்திவேல், ஜவகர், சரவணன், அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் சந்திரசேகரன், தொழில் நுட்ப வல்லுனர்கள் தீபா, திவ்யா, முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பருத்தி சாகுபடி முறைகுறித்து பயிற்சி முகாம்

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த வெண்ணந்தூர் யூனியனுக்கு உட்பட்ட நாச்சிப்பட்டி, அத்தனூர் ஆயிபாளையம், அக்கரைப்பட்டி, ஓ.சவுதாபுரம் கிராமங்களில், அட்மா திட்டத்தின் மூலம், "டெக்னாலாஜி பேக்கேஜிங்' என்ற தலைப்பில், பருத்தி பயிரின் சாகுபடி முறைகள் குறித்து பயிற்சி நடந்தது.அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் ரமேஷ் தலைமை வகித்தார். தொழில் நுட்ப வல்லுனர் ஜமுனாராணி முன்னிலை வகித்தார். விவசாயி சீனிவாசன், விதை நேர்த்தி முறைகளை செயல் விளக்கம் மூலம் செய்து காண்பித்தார். அத்தனூர்புதூர் ராமமூர்த்தி, இயந்திரத்தின் மூலம் பருத்தி அறுவடை செய்யும் முறை குறித்து, செயல் விளக்கம் அளித்தார். மேலும், பருத்தி வீரிய ஒட்டு ரக உற்பத்திக்கு, அக்கரைப்பட்டி விவசாயி செந்தில், பருத்தி ப்ளஸ், பருத்தி நுண்னூூட்ட சத்து பயன்படுத்தும் முறைகளை செய்து காண்பித்தார்.

## பொக்லைன் மூலம் மரவள்ளிஅறுவடை : விவசாயிகள் அதிரடி

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில், பொக்கலைன் இயந்திரம் மூலம் மரவள்ளியை விவசாயிகள் அறுவடை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை, புதுப்பட்டி, மங்களபுரம், ஆயில்பட்டி மற்றும் வெண்ணந்தூர் சுற்றுவட்டாரத்தில், மரவள்ளி சாகுபடி கணிசமான ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்படுகிறது.இந்தாண்டு, மேற்குறிப்பிட்ட பகுதிகளில், பரவலாக மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எனினும், எதிர்பார்த்த அளவுக்கு மழை பெய்யவில்லை. தவிர, கூலியாட்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது. எனவே, தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ள மரவள்ளியை, நாமகிரிப்பேட்டை சுற்றுவட்டார விவசாயிகள், பொக்லைன் இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.தொட்டிப்பட்டியை சேர்ந்த விவசாயி பழனிவேல் கூறியதாவது:வறட்சி காரணமாக, அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ள மரவள்ளியை நிலததில் இருந்து பிடுங்க இயலவில்லை. அறுவடை செய்ய தாமதம் ஏற்பட்டால், கிழங்கு இறுகிவிடும். அதனால் அவற்றை விற்பனை செய்ய இயலாது.எனவே, பொக்லைன் மூலம் மரவள்ளி அறுவடை செய்யப்படுகிறது. போதிய

மழை இல்லாததால், கடந்த ஆண்டு ஏக்கருக்கு, 50 முதல், 60 மூட்டை மட்டுமே விளைந்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**ஒருங்கிணைந்த பண்ணைய முறைபின்பற்ற விவசாயிகளுக்கு அறிவுரை**

தர்மபுரி: ""ஒருங்கிணைந்த பண்ணைய முறையை விவசாயிகள் பின்பற்றி கால்நடைகளை வளர்ந்தால் அதிக லாபம் பெறலாம்,'' என பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் தமிழ்செல்வன் தெரிவித்தார்.தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் மூலம் பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் வட்டார உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு பாலக்கோடு தக்காளி வணிக வளாகத்தில், தொழில் நுட்ப பயிற்சி நடந்தது. உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் தலைமை வகித்து பேசியதாவது:புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே பரப்புவதில், விரிவாக்க பணியாளர்களுக்கு உதவ வேண்டும். தற்போது, நிலவி வரும் பாசன நீர் பற்றாக்குறையை தவிர்க்க சொட்டு நீர் பாசன முறையை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.தண்ணீர் தேவை அதிகமுள்ள பயிர்கள் சாகுபடி செய்வதை விட குறைந்த நீர் தேவையுள்ள குறுகிய கால பயிர்களான மக்காச்சோளம், ராகி மற்றும் சாமை ஆகிய பயிர்களை மாற்று பயிர்களாக சாகுபடி செய்வதன் மூலம் குறைந்த நீரில் அதிக பரப்பளவு சாகுபடி செய்து விவசாயிகள் அதிக வருவாய் பெறலாம்.இவ்வாறு பேசினார்.பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் தமிழ்செல்வன் பேசுகையில், ""விவசாயிகள் இன்றைய கால கட்டத்தில் பயிர் சாகுபடி மேற்கொள்வதோடு, ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளான கறவை மாடு வளர்த்தல், நாட்டுக்கோழி வளர்த்தல், கொட்டில் முறை ஆடு வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட்டு, அதிக லாபம் பெறலாம். நில சம்பங்கியில் உயர் விளைச்சல் ராகங்களை சாகுபடி செய்ய வேண்டும்,'' என்றார்.பாலக்கோடு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் பாஸ்கர், தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் மானிய திட்டங்கள் குறித்தும், தோட்டக்கலை பயிர்களில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்தும், உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தார்.கால்நடை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலைய உதவி பேராசிரியர் ராஜ்குமார், கலப்பின பசுக்கள் வளர்ப்பில் பசுந்தீவனம் மற்றும் அடர்

தீவனத்தின் விகிதம் குறித்தும், கால்நடைகளில் குடற்புழு நீக்கத்தின் முக்கியத்துவம் குறித்தும் தெளிவாக விளக்கினார்.பயிற்சியில், உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் புவ÷ன்வரி, உயிர் உர உற்பத்தி நிலைய வேளாண் அலுவலர் சசிகுமார் ஆகியோர் மண் வள பாதுகாப்பு முறைகள், மண் மாதிரி எடுக்கும் முறைகள், மண் மாதிரி எடுப்பதன் முக்கியத்துவம், உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விளக்கினார்.வேளாண் வணிக துறை சார்பில் ஒழுங்குமுறை விற்பனை கூட மேற்பார்வையாளர் பன்னீர்செல்வம் வேளாண் சந்தைப்படுத்துதல் குறித்தும், மீன் வள மேற்பார்வையாளர் காசியப்பன் மீன் வளத்துறை திட்டங்கள் குறித்தும் பயிற்சி அளித்தனர்.ஏற்பாடுகளை பாலக்கோடு வட்டார அட்மா திட்ட பணியாளர் கோபி செய்திருந்தார்.

**ஏமாற்றிய பருவ மழைநெல் சாகுபடி பரப்பு சரிவு**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், போதிய பருவமழை இல்லாததால், நெல் சாகுபடி பரப்பு குறைந்துள்ளது.தர்மபுரி மாவட்டத்தில், சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களில் நெல், ஒன்றாகும். கடந்தாண்டு, மாவட்டத்தில் அதிகபட்சமாக பாலக்கோடு தாலுகாவில், ஐந்து ஆயிரத்து, 935 ஹெக்டேரும், அரூர் தாலுகாவில், ஐந்து ஆயிரத்து, 170 ஹெக்டேர், பாப்பிரெட்டிப்பட்டியில், முன்று ஆயிரத்து, 362 ஹெக்டேர், தர்மபுரியில், இரண்டு ஆயிரத்து 843 ஹெக்டேர், பென்னாகரத்தில், 119 ஹெக்டேர் நெல் சாகுபடி செய்யப்பட்டது.இந்தாண்டு,ஏப்ரல் மாதத்தில் முதற்கட்டமாக , ஆயிரத்து, 500 ஹெக்டேர் நெல் சாகுபடி செய்து அறுவடை செய்யப்பட்டது. மாவட்டத்தில் போதிய அளவு பருவமழை பெய்யாததால், விவசாயிகள் நிலத்தடி நீரை நம்பி மாவட்டம் முழுவதும், கடந்த, செப்டம்பர் மாதம், 12 ஆயிரம் ஹெக்டேரில் மட்டும் நெல் நடவு செய்தனர்.அரூர் மற்றும் பாப்பிரெட்டிபட்டியில் ஓரளவு பருவமழை பெய்ததால் அப்பகுதியில் உள்ள வாணியாறு, வரட்டாறு அணைகளில் நீர் மட்டம் உயர்ந்திருந்தது. விசாயிகளின் கோரிக்கையை ஏற்று, இரு அணைகளில், இருந்து பாசனத்துக்கு கடந்த சில தினங்களுக்கு முன் தண்ணீர் திறந்து விடப்பட்டது.பிற பகுதிகளில் விவசாயிகள் நிலத்தடி நீரின் மூலம் சாகுபடி செய்த நெல்லுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தனர். தற்போது, நெல் அறுவடை சீசன் துவங்கிய நிலையில்,மாவட்டம் முழுவதும் சாகுபடி செய்யப்பட்டுள்ள

நெல் அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.பருவ மழை பொய்த்ததால், இந்தாண்டு தர்மபுரி மாவட்டத்தில் நெல் சாகுபடி பரபரப்பளவு குறைந்துள்ளதாக விசாயிகள் தெரிவித்தனர். சந்தையில் கடந்த சில தினங்களாக உயர்ந்து வரும் அரிசி விலை தங்களுக்கு ஆறுதலாக உள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்

**விவசாயிகள்குறைதீர் கூட்டம்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை (டிச.,28) காலை, 11.30 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது.கலெக்டர் லில்லி தலைமை வகிக்கிறார். "விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள விவசாயம் தொடர்பான பிரச்னைகள் குறித்து, கூட்டத்தில் நேரிலும், மனுக்கள் மூலமும் தெரிவித்து உரிய தீர்வு பெறலாம்' என கலெக்டர் லில்லி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**
**27.12.2012 A.M**

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் கலெக்டர் சித்திரசேனன் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நேற்று (26ம்தேதி) காலை 11 மணிக்கு காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட கூட்டரங்கில் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. நிர்வாக பணி காரணமாக இன்று (27ம்தேதிக்கு) மாற்றப்பட்டுள்ளது. வேளாண்மை துறை மற்றும் சார்புதுறை அலுவலர்கள் கலந்து கொள்கிறார்கள்.

எனவே, விவசாயிகள் தவறாது கலந்து கொண்டு சந்தேகங்களுக்கு தீர்வு காணும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வையாவூருக்கு பாலாற்று நீர் விவசாயிகள் கோரி க்கை**

காஞ்சிபுரம், : தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், காஞ்சிபுரம் வட்டக்குழு சார்பில் கீழ் வெண்மணி தியாகிகள் தினம், விவசாயிகளுக்கு அடை யாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

வட்ட செயலாளர் லாரன்ஸ் தலைமை வகித்தார். வட்ட தலைவர் சாந்தி பூசன் விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒன்றிய செயலாளர் ஆறுமுகம் மற்றும் நிர்வாகிகள் சகாதேவன், வசந்தா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில், வையாவூருக்கு பாலாற்று நீர் கொண்டு வரவேண்டும், வையாவூரில் மூடிகிடக்கும் காமாட்சியம்மன் நூற்பாலையை திறக்க வேண்டும், முத்தியால்பேட்டை-ராஜகுளம் இடையே பேருந்து இயக்கவேண்டும்,

துணை சுகாதார நிலையம் அமைக்கவேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சம்பாவுக்கு நிவாரணம் வழங்கும் வரை தஞ்சை கலெக்டர் அலுவலகம் முற்றுகை



தஞ்சை: அகில இந்திய விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்ட செயலாளர் பக்கிரிசாமி, தலைவர் வாசு ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காவிரி பாசன மாவட்டங்களில் 14 லட்சம் ஏக்கரில் பயிரிட்டுள்ள சம்பா பயிர் கருகி அழிந்து வருகிறது. மனமுடைந்து தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் இறப்பை அரசு ஏற்காமல் மூடி மறைக்கிறது. எனவே தமிழக அரசு, ஏக்கருக்கு ஸீ25 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். விவசாய தொழிலாளர்களுக்கு குடும்பத்திற்கு தலா ஸீ10 ஆயிரம் வழங்க வேண்டும். கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். சாகுபடி செய்யப்படாமல் உள்ள நிலங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். 100 நாள் வேலை திட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும். தற்கொலை செய்த விவசாயிகள் குடும்பத்திற்கு தலா ஸீ10 லட்சம் நிவாரணமும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும். மத்திய அரசு உடனடியாக மாநில அரசுக்கு ஸீ1000 கோடி நிதி உதவி வழங்க வேண்டும். காவிரி நடுவர்மன்ற இறுதி தீர்ப்பை அரசிதழில் உடனடியாக வெளியிட வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி குறிப்பாக நிவாரணம் வழங்கும் வரை தஞ்சை கலெக்டர் அலுவலகத்தை ஜனவரி 7ம் தேதி முதல் தினமும் தொடர்ந்து முற்றுகையிடும் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

27.12.2012 A.M

## நெல் விளைச்சலை நிர்ணயிக்கும் காரணிகள் வேளாண்மை அதிகாரி விளக்கம்

கோபிசெட்டிபாளையம்,

நெல் விளைச்சலை நிர்ணயிக்கும் காரணிகள் குறித்து கோபி வேளாண்மை அதிகாரி விளக்கம் அளித்து உள்ளார்.

**சராசரி மகசூல்**

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது–

ஒரே பருவத்தில் நெல் சாகுபடி செய்தும் அருகருகே வயல்கள் உள்ள விவசாயிகள் ஒரே ரகத்தை பயிர் செய்தும், ஒரே மாதிரியான சாகுபடி முறைகளை கையாண்டும் கூட மகசூல் வேறுபடுகிறது. ஒரு சதுர மீட்டரில் 80 மீட்டரில் 80 நெல் நாற்றுக்கள் நடப்பட்டு அதில், 10 கதிர்கள் இருந்தால் 800 கதிர்களும், கதிருக்கு 100 மணிகள் வீதம் 80 ஆயிரம் மணிகள் கிடைக்கும்.

அதன் எடை 1.6 கிலோவாகவும், ஏக்கருக்கு 6 ஆயிரத்து 400 கிலோ அதாவது 24 பொதி கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது. மேற்கண்ட கணக்கில் ஒரு கதிரில் 100 மணிகள் கிடைக்கும் என கணக்கிடப்பட்டு உள்ளது. ஒரு கதிரில் 200 முதல் 275 மணிகள் வரை பெற முடியும். ஆனால், தற்போது விவசாயிகள் 30 மூட்டைகள் தான் சராசரியாக மகசூல் பெறுகின்றனர்.

**காரணிகள்**

ஒவ்வொரு குத்துக்கும் உருவாக வேண்டிய தூர்கள், ஒவ்வொரு கதிரிலும் இருக்க வேண்டிய பூ மொட்டுக்கள், ஒவ்வொரு கதிரிலும் கிடைக்கும் முற்றிய நெல் மணிகள் மற்றும் நெல் மணியின் எடை ஆகியவையே நெல்லில் மகசூலை அதிகரிக்கும் காரணிகளாகும். ஒவ்வொரு நெல் பயிரிலும் பயனற்ற தூர்கள், பயனுள்ள தூர்கள் இருவகைத் தூர்கள் உருவாகும்.

விதைத்ததில் இருந்து 20–வது நாள் தூர் கட்ட ஆரம்பித்து 50–60 நாட்களில் மிக அதிக தூர்களை கொண்டிருக்கும். விதைத்த 30 முதல் 35–வது நாளில் இருந்து 45–50 நாட்களுக்குள் மிக தூரிதமாக தூர்கள் வெளிவரும். 30 முதல் 35 நாட்களில் உருவாகும் தூர்கள் தான் திடமாக இருக்கும். இவைதான் மகசூலை நிர்ணயிக்கும் கதிர்களை உருவாக்கும் தூர்களாகும். இந்த காலக்கட்டத்தில் பயிரை உரமிட்டு நன்கு பராமரித்து அந்த ரகத்தின் தூர்விடும் திறனை முழுமையாக அடைந்துவிட வேண்டும்.

**தண்டு திரண்ட நாற்றுக்கள்**

50 நாட்களுக்குப் பின் வரும் தூர்கள் கதிர் விடாது என்பதை விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். நடவு வயலை மிக வளமாகவும், பதமான சேற்றுழவு உள்ளதாக செய்ய வேண்டும். நன்றாக சமன்படுத்தப்பட்ட நடவு வயல் அமைக்க வேண்டும். இது பயிர் சமயத்தில் உயிர் பிடித்து பச்சையாக தூர்விட வழிசெய்கிறது. நல்ல திடமான இளம் நாற்றுக்களை நடவுசெய்ய வேண்டும்.

நாற்றுக்கள் பூச்சி நோய் தாக்காத இலை தண்டுடன் இருக்க வேண்டும். உயரமில்லாத நாற்றாக இருக்க வேண்டும். 5 இலை உள்ள வலுவான தண்டு திரண்ட நாற்றுக்கள் சிறந்தது. அடர்த்தியான வேர் கொண்ட குட்டையான நாற்றுக்கள்தான் அதிக தூர்களை உருவாக்கும். நாற்றுக்களை மேலாக நட வேண்டும். எல்லா தூர்களின் முளைக்கண்களும் வேர் துவங்கும் கழுத்துப் பகுதியில் அமைந்திருப்பதால் ஆழமாக நட்டால் பாதிக்கும் மேற்பட்ட தூர்கள் பாதியிலேயே அழிந்து விடும்.

**ஊட்டச்சத்து சூழ்நிலை**

போதிய எண்ணிக்கையில் நாற்றுக்களை நட வேண்டும் நட்ட நாற்றுக்கள் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் மிக துரிதமாக உயிர் பிடித்து பச்சை கட்ட வேண்டும். முன்னுக்கு பின்

பச்சை பிடித்தால் முதலில் பச்சை கட்டியவை ஊட்ட சத்துக்களை எடுத்து வளர்ந்து, பின்னால் பச்சை கட்டக் கூடியவற்றிக்கு வளர தேவையான சத்துக்கள் இல்லாமல் செய்து விடும்.

அடி உரமாக இட்ட தொழுஉரம், கம்போஸ்ட் நன்கு மக்கும் முன்பாக விதைத்தாலும், நடவு செய்தாலும் தூர் கட்டுவது பாதிக்கும். பருவத்தில் உரமிட வேண்டும். மண்ணின் வளம் இயற்கையாகவே மிக அதிகமாக இருக்க வேண்டும். தேவையானால் அதிகமாக அடி உரம் இட்டு நடவு வயலின் அடி வளத்தை உயர்த்த வேண்டும். நெல் இளம் பயிராக உருவாகும்போதே ஊட்டச்சத்தான சூழ்நிலையை ஆக்கித் தருவதுதான் கதிர்களையும், மணிகளையும் அதிகரிக்கும் ரகசியமாகும்.

**கதிர்கள் உருவாவது பாதிக்கும்**

நாற்றுவிட்ட 30 முதல் 50 நாட்கள் வரை துரிதமாக தூர்கள் வெளிவரும் கட்டமாதலால் பயிரின் வயது சுமார் 30 முதல் 35 நாட்கள் இருக்கும்போது அவசியமாக மேலுரம் இட வேண்டும். தாமதமாக உரமிட்டால் பயனற்ற தூர்கள் பெருகுவதற்கு தான் உரம் உதவும். இது கதிர்கள் உருவாவதை பாதித்து, மணிகளின் எண்ணிக்கையை குறைக்கும். அளவாக நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மிக துரிதமாக தூர்கள் வெளிவரும் பருவத்தில் நிறைய தண்ணீர் கட்டினால் பயிர் களைகள் அதிகமாக வளர்ந்து தூர்களின் வளர்ச்சியை பாதிக்கும்.

பயிரின் வயது 30 முதல் 50 நாட்கள் வரை ஒரு அங்குல உயரத்திற்கு மேல் தண்ணீர் கட்டக்கூடாது. பயிரின் வயது 60 நாட்களுக்குப் பிறகு, 2 அங்குல நீரை கட்டி தேவையற்ற தூர்கள் வருவதை தடுக்க வேண்டும். ஒவ்வொரு தூரிலும் நெல் மணிகளின் எண்ணிக்கையை அதிகமாக்க தெரிந்து கொள்வது அவசியமாகும். ஒரு கதிரில் அதிகமான மொட்டுக்கள் உற்பத்தியானாலும், பதரைக் குறைத்து முற்றிய நெல் மணிகளின் எண்ணிக்கையையும், மணிகளின் எடையையும் அதிகரிக்க வேண்டும்.

**மேலுரமாக தழைச்சத்து**

அப்போதுதான் ஒரு கரத்தின் முழுத் திறனையும் பெற முடியும். ஒவ்வொரு கதிரிலும் மணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மணிகளின் பரிமானத்தை பெரிதுபடுத்தவும்,

மணிகளின் எடையை அதிகரிக்கவும் கதிர் வெளிவருவதற்கு 25 முதல் 30 நாட்களுக்குள் தழைச்சத்து மேலுரமாக கொடுக்க வேண்டும். பயிரில் கதிர் வெளிவந்த ஒரு வாரத்தில் செடியின் கடைசி மூன்று இலைகள் நன்றாக பசுமையாக இருந்தால், மற்றுமொரு மேலுரம் இடுவது மணியின் எடை கூடுவதற்கு உதவும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியுள்ளார்.